Registered as a NewsPaper

விலை: ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்




பொதுசன நூலகம்
26 JUL 2004
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

பக்கங்கள் – 12

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஆடி–11 | 26–07–2004 | திங்கட்கிழமை | ஓசை –159

# கருணா தரப்பினரிடையே பிளவு

# ஏழுபேர் சகாக்களால் படுகொலை

## சுட்டுக்கொன்றோர் புலிகளிடம் சரண்

(மட்டக்களப்பு)

**கருணாகுழுவில் இருந்து அதிருப்தியுற்ற சிலர் தமது சகாக்கள் ஏழு பேரையும் மற்றுமொருவரையும் கொழும்பில் சுட்டுக்கொன்றுவிட்டு அம்பாறையில் விடுதலைப்புலிகளிடம் சரணடைந்தனர். கொல்லப் பட்டவர்களில் கருணாவின் நெருங்கிய சகாவான குகனேசனும் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.**

கருணாதரப்புடன் யூலை24ஆம் திகதி (நேற்றுமுன்தினம்) வரை தாம் இருந்ததாகக்கூறும் புலிகளிடம் சரணடைந்தவர்கள் தமக்கிடையே ஏற்பட்ட கருத்துவேறுபாடே இக்கொலைகளுக்கு காரணம் எனத் தெரிவித்தனர். அத்துடன் இவர்கள், குகனேசன், கஸ்ரோ, கேசவன், ரூபன், அற்பரன்,விக்கி மற்றும் விமல்காந்த் ஆகியோர் கொல்லப்பட்டதாகத் தெரிவித்தனர்.

இதேவேளை கொல்லப்பட்ட குகனேசன் குற்றச்செயலுக்காக கைது செய்யப்பட்டு யூன் மாதம் இராணுவப்புலனாய்வுப்பிரிவின் தலையீட்டால் விடுதலை செய்யப் பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இச்சம்பவத்தில் கொல்லப்பட்ட 8 ஆவது நபர் சிறிலங்கா இராணுவப் புலனாய்வுத் துறையைச் சேர்ந்தவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.



குகனேசன் | கஸ்ரோ | தேசவன்



## இராணுவப் புலனாய்வு அதிகாரி தம்மிக்கவும் கருணாவின் சகாக்களால் சுட்டுக்கொலை

கொழும்பு புறநகரான கொட்டாவவில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்தில் கொல்லப்பட்ட எட்டாவது நபர் இராணுவப் புலனாய்வுப்பிரிவைச் சேர்ந்த தம்மிக என்பவர் ஆவார் என தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது இவ்வாறான சம்பவம் ஒன்று இடம்பெறவில்லை என்ற ரீதியில் அதிகாலை முதல் நண்பகல் வரை படைத்தரப்பு மௌனம் சாதித்து பின்னர் சுமார் 10.30 மணியளவில் இராணுவப் பேச்சாளர் கேணல் சுமேதபெரேரா கருத்து வெளியிடுகையில் இச்சம்பவத்தில் இராணுவம் தொடர்புபடவில்லையென்றும் இருந்தபோதிலும் எட்டுப்பேர் மலபே வீதி கொட்டவவில் என்னும் இடத்தில் கொல்லப்பட்டடுள்ளதாகவும் தெரிவித்தார்.

கொழும்பிலிருந்து சுமார் 12 மைல்கள் கிழக்கு பிரதேசத்தில் இந்த இடம் அமைந்துள்ளதாகவும் மிகவும் குளிர்மையானதும் செழிப்பானதுமான ஓர் இடத்திலேயே சம்பவம் இடம்பெற்ற வீடு அமைந்துள்ளதாகவும் வீட்டின் முதலாவது மாடியில் வைத்துத்தான் இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றது

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அவுஸ்திரேலிய இராணுவத் தளபதி யாழ்.இற்கு இரகசிய விஜயம்

அவுஸ்திரேலியாவின் இராணுவத்தளபதி டேவிட் பின்ஸ் மற்றும் அவுஸ்திரேலியாவின் இலங்கைக்கான தூதுவர் டேவிற் வீனஸ் ஆகியோர் அடங்கிய குழு ஒன்று யாழ்ப்பாணத்திற்கான இரகசிய விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளது.

இராணுவ ரீதியிலான உறவுகளைப் பலப்படுத்தும் நோக்குடன் கடந்த 22 ஆம் திகதி யாழ்ப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தம்மிக்க யாரென்பதை 24 மணிநேரத்தில் கூறுவோம்

**சிறில. பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்**

கருணா குழுவைச் சேர்ந்த ஏழுபேர் நேற்று சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தின் போது கொல்லப்பட்ட எட்டாவது நபரான தம்மிக்க என்பவர் இராணுவப்புலனாய்வுத் துறையைச் சேர்ந்தவரல்ல என சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் தெரிவித்தார்.

கருணா குழுவைச் சேர்ந்த 7 பேர் கொழும்பில் புறநகர்ப் பகுதியருகே நேற்று கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக, கொல்லப்பட்டவர்களில் இராணுவ புலனாய்வுத் துறையைச் சேர்ந்த நீல் தம்மிக்க என்பவரும் உள்ளடங்குகிறார் என வரும் செய்திகள் தொடர்பாக இலங்கைப் பாதுகாப்பமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத்திடம் கேட்டபோதே அவர் இவ்வாறு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தலைவர் பிரபாகரனின் கை உயரவேண்டும் இதில் நாம் உறுதியாக இருக்கின்றோம்

**–பெங்களூர் மாநாட்டில் சந்திரசேகரன்**

தலைவர் பிரபாகரனுடைய கை உயரவேண்டுமென்பதிலேயே நாம் உறுதியாக இருக்கிறோம். இது அரசியலல்ல.இலங்கையிலே இருக்கின்ற அரசாங்கங்கள் தமிழீழ விடுதலைப்புலிகளிடம் மண்டியிடுகின்றதென்றால் அவர்கள் தங்களது பலத்தைக் காட்டியுள்ளார்கள் என மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரன் கூறியுள்ளார். உலகத் தமிழர் பேரவையின் இரண்டாம் ஆண்டு நிறைவு விழா மாநாடு நேற்று இந்தியாவிலுள்ள பெங்களூரில் நடைபெற்றது. இம் மாநாட்டில் மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரன் உரையாற்று

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழ வரலாற்றுத் தேர்வின் பெறுபேறுகள் வெளியாகின

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ கல்விக்கழகத்தினால் நடாத்தப்பட்ட தமிழீழ வரலாற்றுத் தேர்வின் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன.

கடந்த ஆண்டு(2003) நடத்தப்பட்ட இந்தத் தேர்வில் சித்தி பெற்றவர்களின் தேசிய, வலயமட்டத்திலான பெறுபேறுகளே கல்விக் கழகத்தினால் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளன. தரம்-06,07,08 ஆகிய வகுப்புக்களுக்கு நடத்தப்பட்ட இந்தத் தேர்வில் தேசிய மட்டத்தில் 09 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இதனைவிட வலயமட்டத்திலும் வெற்றி பெற்றவர்களின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது. மேற்படி தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கறுப்பு யூலையை முன்னிட்டு நேற்று தமிழர் தாயகமெங்கும் துக்க தினம்

கறுப்புயூலை தினமான நேற்று தமிழர் தாயகப் பகுதியெங்கும் துக்கதினம் கடைப்பிடிக்கப்பட்டது. இதனால் அனைத்துக்கடைகளும் மூடப்பட்டிருந்தன.அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த ஏனைய நடவடிக்கைகள் அனைத்தும் ஸ்தம்பித நிலையடைந்தன. அத்துடன் அனைத்து இடங்களிலும் கறுப்புக் கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன.

யாழ். குடாநாட்டில் உணவகங்கள், மருந்தகங்கள் தவிர ஏனைய அனைத்து வர்த்தக நிலையங்களும் பூட்டப்பட்டிருந்தன. வாகன போக்குவரத்துச் சேவைகள் நடைபெற்ற போதிலும் மக்கள் போக்குவரத்துச்செய்தது குறைவாகவே இருந்தது.

(12 ஆம் பக்கம் பார்க்க)



## வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

கிஸ்ணலீலா சுப்பிரமணியம் ஆகிய எனது தேசிய அடையாள அட்டையும்,(இல-656801883V) நிரந்தர அனுமதி அட்டையும் கடந்த 24.07.2004 அன்று புளியங்குளத்துக்கும் கிளிநொச்சிக்கும் இடையில் காணாமல் போயுள்ளது. கண்டெடுப்பவர்கள். ஈழநாதம் விளம்பரப் பணிமனையில் கொடுத்து உதவுமாறு கேட்டுக்கொள்கின்றேன். (4849)

## ஒன்று கூடல்

(உடையார்கட்டு)

விசுவமடு தொட்டியடி முன்பள்ளியிலும், உடையார்கட்டு கமநல சேவை நிலையத்திலும் கமக்கார அமைப்பினருக்கான ஒன்று கூடல் கடந்த புதனன்று நடைபெற்றது.

இதில் விசுவமடு பிரதேச பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர், விவசாய போதனாசிரியர் கமலதீபன் கமக்கார அமைப்பு உறுப்பினர்கள் ஆகியோர் கலந்திருந்தனர். இங்கு கருத்துரையை நீர்பாசன பொறியிலாளர் வழங்கினார். (19)

## மாகாண இலக்கிய விழா ஆய்வரங்கிற்கு பேராளர்கள் பதிவு செய்யக் கோரிக்கை

வடக்கு கிழக்கு கல்வி,பண்பாட்டலுவல்கள் திணைக்களம் எதிர்வரும் ஒக்டோபர் 8,9,10ஆம் திகதிகளில் நடத்தவுள்ள மாகாண இலக்கிய விழா 2004 இன் ஆய்வரங்கின் கருப்பொருளாக "ஈழத்தின் கல்விஅறிவியல்சார் எழுத்துக்கள்- வரலாற்று விமர்சன நோக்கு" என்பது தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. விழாவின் மூன்று தினங்களும் காலை நிகழ்வாக ஆய்வரங்கு இடம்பெறும்.

இவ் ஆய்வரங்கில் பேராளர்களாகப் பங்குபற்றவிரும்பும் ஆய்வாளர்கள், குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் தங்களது பெயர்களை ஒகஸ்ட் மாதம் 31ஆம் திகதிக்கு முன்பதாக பதிவு செய்து கொள்ளுமாறு மாகாணப்பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப்பணிப்பாளர் திருமதி என். ஸ்ரீதேவி கேட்டுள்ளார். (25)

## வன்னிவிளாங்குளம் பாடசாலைக்கு சோலர் தொகுதி அன்பளிப்பு

வன்னிவிளாங்குளம் அரசினர் தமிழ்க் கலவன்பாடசாலை மாணவர்களின் நலன் கருதி தமிழீழ மாணவர் அமைப்பினால் 'சோலர்' மின் பிறப்பாக்கி தொகுதி ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது. பாடசாலையின் முன்னாள் அதிபர் செ. ஜெயகாந்தன் முன்னிலையில் தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் நளன் அவர்கள் நேற்று (25ஆம் திகதி) இச் 'சோலர்' மின்கலத்தை கையளித்துள்ளார்.

## புகழேந்தி நகர் கிராமத்திற்கு ஊரக தே. எ.பே. தெரிவு

துணுக்காய் பிரதேசத்தில் புகழேந்திநகர் கிராமசேவகர் பிரிவில் நேற்று முன்தினம் ஊரகதேசிய எழுச்சிப்பேரவை தெரிவுக்கூட்டம் இடம்பெற்றது.

கிராமசேவையாளர் நவரத்தினம் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் கோட்ட தேசிய எழுச்சிப்பேரவை பொறுப்பாளர் மயூரன் முல்லை.மாவட்ட தொழிற் சங்க பொறுப்பாளர் துணுக்காய் பிரதேச அரசியல் துறைப்பொறுப்பாளர் புனிதன் உட்பட கிராமப்பொறுப்பாளர் உட்பட பலரும் கலந்துகொண்டு கருத்துரைகளை நிகழ்த்தினர்.

ஒன்பது பேர்கொண்ட ஊரக தேசிய எழுச்சிப்பேரவை உறுப்பினர் தெரிவும் இடம்பெற்றது. (24)

### - கந்தளாய் ஆதார வைத்தியசாலைக்கு -

# நிரந்தர வைத்திய அதிகாரியை நியமிக்கக் கோரி மக்கள் போராட்டம்

(திருகோணமலை)

கந்தளாய் ஆதார வைத்திய சாலையில் தற்காலிக மாவட்ட வைத்திய அதிகாரியை இடமாற்றம் செய்து நிரந்தர அடிப்படையில் வைத்திய அதிகாரி ஒருவரைநியமிக்குமாறு கோரி கடந்த வியாழக்கிழமை பகல் 11 மணியளவில் கந்தளாய் நகரைச்சேர்ந்த குடியிருப்பாளர்கள் நூற்றுக் கணக்கானோர் திருகோணமலை நகரில் மாகாண ஆளுநர் அலுவலகத்துக்குச் செல்லும் வீதியில் ஆர்ப்பாட்டம் செய்தனர். வைத்தியசாலை நிர்வாகம் சீர்குலைந்துள்ளதாகவும் சேவைகள் திருப்திகரமாக வழங்கப்படவில்லை என்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் சுலோக அட்டைகளை ஏந்திய வண்ணம் கோஷங்களை எழுப்பினர். ஆர்ப்பாட்டம் நடந்த இடத்தில் திருகோணமலை பொலிஸ் தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டர் குணரத்தின தலைமையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. ஆர்ப்பாட்ட முடிவில் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றை கந்தளாய் மக்கள் சார்பில் தூதுக்குழு ஒன்று ஆளுநர் பிரதிநிதியிடம் ஒப்படைத்தது. ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோகா ஜெயவர்த்தன திருமலையில் இருக்கவில்லை. (25)

## நீண்டகாலம் புனரமைக்கப்படாத மாத்தளன் வீதியால் அசௌகரியம்

(புதுக்குடியிருப்பு)

கரைதுரைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் உள்ள இரட்டை வாய்க்கால் ஊடான மாத்தளன் வீதி நீண்ட காலமாக புனரமைப்பு செய்யப்படாமல் வீதி அற்றுப் போகும் நிலை உருவாகிவருகின்றது.

சிறிய பாலங்களின் புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்ட போதும் அது மந்தகதியில் உள்ளதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மேலும் இவ்விடயம் குறித்து யாரும் அக்கறை கொள்வதாகத் தெரியவில்லை. எமது பகுதி வீதியை புனரமைப்புச் செய்து போக்குவரத்தை இலகு படுத்த சம்பந்தப்பட்டவர்கள் முன்வந்து உதவவேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (0ฎ)

## அடிப்படை வசதிகளின்றி பாலையடிச் சந்தை

(துணுக்காய்)

பாண்டியன்குள பிரதேச பாலிநகர் பொதுச்சந்தை எவ்வித அடிப்படை வசதிகளுமின்றி செயற்பட்டு வருகின்றது.

மேற்படி பொதுச்சந்தைப்பகுதியில் அண்மையில் மாந்தை கிழக்கு பிரதேச சபையினரால் மரக்கறி சந்தையின் ஒருபகுதி மட்டும் புனரமைக்கப்பட்டது. இச் சந்தைப் பகுதியில் மலசலகூடம், குடிநீர்க் கிணறு இல்லாத நிலையில் இயங்கி வருவதானால் மேற்படி சந்தைப்பகுதிக்கு வரும் மக்கள் பல அசௌகரியங்களுக்கு ஆளாகிவருகின்றனர்.

மேற்படி சந்தைப்பகுதியில் உள்ள கொட்டில்கள் சீரற்ற நிலையில் உள்ளன.

இக்கொட்டில்களும் மழை காலத்தில் நீர் உட்புகும் நிலையில் இருக்கின்றன. 1995ஆம் ஆண்டு சூரியக்கதிர்இராணுவ நடவடிக்கை மூலம் இடம்பெயர்ந்த மக்கள் பாண்டியன்குளம், பாலையடிப் பகுதியில் வாழ்ந்தனர். தற்போதும் அங்கு வாழ்ந்து வரு கின்றனர்.

அன்று தொடக்கம் புலால் விற்பனைக்காக போடப்பட்டகொட்டில் தற்போது உடைந்த நிலையில் இருப்பதனாலும், அதன் அருகிலுள்ள பலசரக்குக் கடைகளும் சீரற்ற நிலையிலிருப்பதாலும் அங்குள்ள மக்கள் கவலையடைந்துள்ளனர். (24)

## உடையார்கட்டு மகாவித்தியாலயத்தில் சிறுவர் பூங்கா அமைக்க நடவடிக்கை

(உடையார்கட்டு)

உடையார்கட்டு மகாவித்தியாலயத்தில் ஆரம்பப் பிரிவு பெற்றார்களுக்கான ஒன்று கூடல் கடந்த வியாழக்கிழமை 10.40 மணிக்கு பாடசாலை ஆசிரியர் ரகு உதயகுமார் தலைமையில் இடம் பெற்றது.

இவ் வொன்றுகூடலில் பல நூற்றுக்கணக்கான பெற்றார் கலந்து கொண்டனர். இங்கு உடையார் கட்டு மகாவித்தியாலய அதிபர் ராஜா பாடசாலை கல்வி விடயங்கள், மாணவர் வரவு ,பூங்கா அமைப்பு விடயமாகக் கருத்து வழங்கினார். இவ் ஒன்று கூடலில் பாடசாலையில் சிறுவர் பூங்கா மீள் அமைப்பிற்கு கல்வித் திணைக்களத்தின் ஒரு பகுதி உதவியான 20.000 உடனும் பெற்றாரின் பங்களிப்புடனும் வேலைகள ஆரம்பிப்பதற்கு முடிவுகள் எடுக்கப்பட்டு பணம் திரட்டுவதற்கான குழுவும் அமைக்கப்பட்டது. (19)

## விழிப்புணர்வு படக் காட்சிகள்

அக்கராயன் ஸ்கந்தபுரம் பிரதேச அரசியல்துறையினரின் ஒழுங்குபடுத்தலில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வையும், சமகால அரசியலை தெளிவுபடுத்தும் வகையிலும் அக்கராயன் பிரதேசத்தில் படக்காட்சிகள் காண்பிக்கப்பட்டு வருவதாக அறியமுடிகின்றது. (15)


# பயணியர் பேருந்துப் புதிய பணி

## மல்லாவி - தேராங்கண்டல் - புத்துவெட்டுவான் - கிளிநொச்சி - வட்டக்கச்சி - புதுக்குடியிருப்பு

**மேற்படி பேருந்துப்பணி பின்வரும் நேர ஒழுங்கிற்கு அமைவாக 01.08.2004 ஆம் நாளிலிருந்து நடைபெறும் என்பதனை பொது மக்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.**



நேர ஒழுங்கு

**மல்லாவி - புத்துவெட்டுவான் - வட்டக்கச்சி - புதுக்குடியிருப்பு**

| மல்லாவி | தேராங்கண்டல் | புத்துவெட்டுவான் | கொக்காவில் | முறிகண்டி | கிளிநொச்சி | வட்டக்கச்சி | புளியம்பொக்கணை | விசுவமடு | புதுக்குடியிருப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| காலை 6.30 | 7.00 | 7.20 | 7.45 | 8.00-8.20 | 8.40-850 | 9.30 | 9.45 | 10.00 | 10.45 |

**புதுக்குடியிருப்பு - வட்டக்கச்சி - புத்துவெட்டுவான் - மல்லாவி**

| புதுக்குடியிருப்பு | விசுவமடு | புளியம்பொக்கணை | வட்டக்கச்சி | கிளிநொச்சி | முறிகண்டி | கொக்காவில் | புத்துவெட்டுவான் | தேராங்கண்டல் | மல்லாவி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| காலை -11.30 | 12.15 | 12.30 | 12.45 | 1.25-1.35 | 1.55-2.15 | 2.30 | 2.55 | 3.15 | 03.45 |

முகாமையாளர்,
பயணியர் போக்குவரவு ஊர்தி வழியனுமதிப் பணியகம் - புதுக்குடியிருப்பு

(சி-10037)

# ஈராக் தீவிரவாதிகளின் அச்சுறுத்தலுக்கு அஞ்சமாட்டோமென்கிறது அவுஸ்திரேலியா

## -தீவிரவாதிகளின் எச்சரிக்கைக்குப் பதிலடி

**ஈராக்கிய தீவிரவாதிகளின் அச்சுறுத்தல்களுக்கு நாம் அஞ்சமாட்டோமென அவுஸ்திரேலியா சூளுரைத்துள்ளது. அவுஸ்திரேலியாவும், இத்தாலியும், ஈராக்கில் நிலைகொண்டுள்ள அமெரிக்கா தலைமையிலான சர்வதேச படையணிகளிலிருந்து தமது படைகளை விலக்கி கொள்ளாது விட்டால், அந்நாடுகளின் மீது தாக்குதல் நடத்தப்போவதாக அல்ஹைதா தீவிரவாதிகளும், இஸ்லாமிய தாகிட்குழுவும் இணையத்தளம் மூலம் மிரட்டல் விடுத்திருக்கின்றது. இதனையடுத்தே அவுஸ்திரேலியா இவ்வாறு தெரிவித்துள்ளது.**

ஈராக்கில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ள அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படையில் 34 நாடுகளின் வீரர்கள் பங்கேற்றுள்ளனர்.

இக்கோரிக்கைகளை எல்லா நாடுகளும் நிறைவேற்றத் தவறினால் அந்தநாடுகள் மீது பயங்கரவாதத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுமென அக்குழு மேலும் எச்சரித்துள்ளது.

இதேவேளை வெடிக்கும் கார்கள் மறுக்கும் தேசங்களின் உயிர்களை பறிக்கும் என 'தாகிட் குழு கூறியுள்ளது.

இவ் எச்சரிக்கை குறித்து அவுஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் ஸ்பெயின், கென்யா, பிலிப்பைன்ஸ், டொமினிக்கன் குடியரசு, நிகராகுவா என்பன தீவிரவாதிகளின் அச்சுறுத்தல்களுக்காக தமது படைகளை வாபஸ்பெற்றுக் கெண்டுள்ளன. இதனால்தான் ஏனைய நாடுகள் தொடர்பாகவும் தீவிரவாதிகள் தொடர்ந்தும் இத்தகைய அச்சுறுத்தல்களை மேற்கொண்டு வருகின்றார்களென கூறியுள்ளார்.

இணையத்தளங்களில் வெளிவருகின்ற அவுஸ்திரேலியா மீதான அழுத்தங்களுக்கு நாம் அதிக கவனம் செலுத்தவில்லையென்றும், அவுஸ்திரேலிய வெளிநாட்டமைச்சர் அலெக்ஸ் சாஸ்டங்டைனர் தெரிவித்துள்ளார் .'ஈராக்கிய' தீவிரவாதிகளின் இவ் அச்சுறுத்தல்களுக்கு எவ்வித பயமும் இல்லையென மேலும் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பாவில் செயற்படுகின்ற அல்ஹதா அமைப்புடன் தொடர்புடைய குழு இத்தகைய அழுத்தங்களை இணையத்தளத்தின் ஊடாகவும் ஐரோப்பிய தொலைக்காட்சிகளின் ஊடாகவும் விடுத்துவருகிறது என்று தெரிவிக்கபடுகிறது.

இஸ்லாமிய தாகிட் இணையத்தளம்ஒன்றில் கடைசியாக வெளியிட்டுள்ள செய்தியில் இநதோனேசியாவில் கார்வெடி குண்டுமூலம் 200 அவுஸ்திரேலியர்கள் கொல்லப்பட்டமை அவுஸ்திரேலியாவுக்கு நினைவிருக்கும் ஈராக் அந்நாட்டு மக்களுக்கே சொந்தம். தீவிரவாதிகள், அத்துமீறி நுழையும் அந்நியர்களின் பூமி தகர்க்கப்படும் என்றும் எச்சரிக்கை செய்திருப்பதனால் ஈராக்கில் நிலைகொண்டுள்ள படைகளின் நாடுகளில் பதற்றமும் பரபரப்பும் ஏற்பட்டுள்ளது.



ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தில் பாலம் ஒன்றில் காவல் கடமையில் ஈடுபட்டுள்ள அமெரிக்கப்படைவீரர்



தீவிரவாதிகளால் கடந்தவாரம் சுட்டுக்கொல்லப்பட்ட ஈராக்கிய பொலிசார் ஒருவரின் தாயார் அழுதுபுலம்புகிறார்.

## கொலின்பவல் மத்தியகிழக்கிற்கு விஜயம்

(வோஷிங்டன்)

அமெரிக்க வெள்விவகார அமைச்சர் கொலின் பவல் மத்தியகிழக்கு, ஐரோப்பிய நாடுகளுக்கு அடுத்தவாரம் விஜயம் செய்யவுள்ளார்.

# ஈராக்கில் கடத்தப்பட்ட இந்தியர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கக்கோரி போராட்டம்

(புதுடில்லி)

ஈராக்கில் பிணைக்கைதிகளாக தீவிரவாதிகளால் கடத்தப்பட்டவர்களை விடுவிக்கவேண்டும் என்று வலியுறுத்தி இமாச்சாலயப்பிரதேச மாநிலத்தில் நேற்று கடையடைப்பும் ஆர்ப்பாட்ட ஊர்வலமும் நடத்தப்பட்டிருக்கின்றது.

பஞ்சாப், இமாச்சாலயப் பிரதேசத்தைச் சேர்ந்த இந்தியர்களே பிணைக்கைதிகளாக கடத்தப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இதனால் மத்தியரசு அசமந்தப் போக்கை காட்டுவதால் பஞ்சாப், இமாச்சாலயப் பிரதேசத்தில் தொடர்போராட்டம் நடத்தப் போவதாகவும் மக்கள் கூறியுள்ளனர்.

ஈராக்கில் தீவிரவாதிகளால் கடத்தி பிணைக்கைதிகளாகப் பிடித்து வைக்கப்பட்டுள்ள இந்தியர்களை விடுவிக்க தீவிரவாதிகளின் காலக்கெடு இன்று மாலையுடன் முடிவடைகின்றது.

இதனிடையே இந்தியப் பிணைக்கைதிகளை பத்திரமாக விடுதலை செய்யுமாறு வெளியுறவு இணையமைச்சர் இயாட் அகமத், ஈராக் தொலைக்காட்சி அல் அரேபியத் தொலைக்காட்சிகளில் தீவிரவாதிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். இதனிடையே பிணைக் கைதிகளின் உறவினர்கள் தமது உறவினர்களை மீட்டுத் தருமாறு பிரதமர் மன்மோகன் சிங், சனாதிபதி அப்துல்கலாம், வெளியுறவு அமைச்சர் நட்வர்சிங் ஆகியோரிடம் நேற்று முன்தினம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பிணைக்கைதிகளை எவ்வித தீங்குமின்றி விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக பிரதமரும், சனாதிபதியும் தம்மிடம் உறுதியளித்துள்ளனர் என்று அவர்கள் செய்தியாளர்களிடம் கூறியுள்ளனர்.



உலகின் வறியநாடுகளில் ஒன்றும் அவுஸ்திரேலியாவினால் கொடுமைக்கார நாடென குற்றஞ்சாட்டப்பட்டதுமான கிழக்குத்திமோரின் படையினர் பயிற்சியில் ஈடுபடும் காட்சி



ஆப் கானிஸ் தானில் பதிவகம் ஒன்றில் காத்திருக் கும் பெண் கள்.

# அரசில் அகமத் கூரி ஏற்படுத்தும் மாற்றங்களை ஏற்கத்தயாரென யசீர் அரபாத் அறிவிப்பு

(ஜெருசலேம்)

பலஸ்தீன பிரதமரும் சீர்திருத்தக் கருத்துக்களின் குரலாகவும் இருக்கின்ற அகமத் கூரி முன்வைக்கின்ற அரசாங்க மாற்றங்களை தாம் அங்கீகரிக்கத் தயாரென சனாதிபதி யசீர் அரபாத் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில், நாட்டில் ஏற்பட்டுள்ள ஊழல் மோசடி மற்றும் ஒழுக்க சீர்திருத்தங்கள் குறித்து கவலையடைந்துள்ள பிரதமர் கடந்த வாரம் தனது இராஜினாமாக் கடிதத்தை சனாதிபதி யசீர் அரபாத்திடம் கையளித்தமை குறிப்பிடத்தக்கது. பலஸ்தீனத்தில் எழுந்துள்ள ஊழல் மோசடி நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்கான அதிகாரமற்ற பிரதமர் பதவி அவசியம் அற்றதென அவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது தெரிந்ததே. அகமத் கூரியின் இராஜினாமாக் கடிதத்தை அங்கீகரிக்குமாறும் அரசாங்க சீர்திருத்த நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் கடுமையான அழுத்தங்கள் யசீர் அரபாத் மீது கடந்தவாரம் மேற் கொள்ளப்பட்டிருந்தன. இந் நிலையில் நேற்று முன்தினம் அவர் அளித்துள்ள பேட்டியில் பிரதமர் மீதான தனது முழுமையான நம்பிக்கையை வெளிக்காட்டி யுள்ளார். இராஜினாமாக் கடிதத்தை ஏற்கமறுத்துள்ள அவர், பிரதமர் முன்வைக்கின்ற சீர்திருத்த நடவடிக்கைகளையும் அரசாங்க மாற்றங்களையும் அங்கீகரிக்கத் தாம் தயாராக இருப்பதாகக் கூறியிருக்கின்றமை அரசியல் விமர்சகர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது.

## சூடானுக்கு அவுஸ்.அமைதிப்படை

சூடானின் இரத்தக் களரியை முடிவிற்குக் கொண்டு வரும் முகமாக ஐக்கிய நாடுகள் சமாதானப் படைக்கு அவுஸ்திரேலியா ஒரு தொகுதி துருப்புக்களைக் கொடுத்துவும் என எதிர்பார்க்கப்படுகின்றது.அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் இது தொடர்பாக கருத்து வெளியிடுகையில், சூடானிற்கு துருப்பினர்களை அனுப்பி வைக்கக்கூடிய சந்தர்ப்பம் இருப்பதாகக் கூறியுள்ளார்.



வடமேற்கு மார்செல்லியில் "ரோவ்" என்ற இடத்தின் அருகே 50 ஹெக்ரேயர் வனப்பகுதியை அழித்ததீயை அணைக்கும் தீயணைப்புப் படையினர்.



கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நேற்று முன்தினம் சென்னை மணிமேகலை பதிப்பகத்தின் நூல் கண்காட்சி நடைபெற்றது. இந்தக் கண்காட்சி மண்டபத்தை கிளி.வலயக்கல்விப்பணிப்பாளர் ப.அரியரத்தினம் திறந்து வைத்தார். மேற்படி கண்காட்சி தமிழீழ கல்விக் கழத்தினதும், அறிவமுது நிறுவனத்தினதும் ஏற்பாட்டில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (படம் : அ.லோகீசன்)

# மல்லிகைத்தீவு மக்களுக்கு உதவி வழுங்குவது குறித்தகூட்டம்

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு மல்லிகைத் தீவு கிராமசேவையாளர் பிரிவில் கடந்த வியாழன் மாலை கெயார் நிறுவனம், வடக்குகிழக்கு அபி விருத்திபுனர்வாழ்வு நிறுவனத் தின் அனுசரணையுடன் மக்களுக்கு உதவி வழங்குவது தொடர்பான கூட்டம் இடம்பெற்றது.

மலசலகூடம் அமைத்தல், பொதுக கிணறுகள் அமைத்தல், கால்நடை வளர்த்தல், விவசாயத்துக்கான உதவிவழங்கல் போன்றவற்றுக் கான பயனாளிகள் இக் கூட்டத்தில் வைத்து தெரிவு செய்யப்பட்டனர்.

இதில் மல்லிகைத்தீவு கிராம சேவையாளர், வடக்கு கிழக்கு அபி விருத்திப் புனர்வாழ்வு நிறுவன இணைப்பாளர், திட்ட இணைப்பாளர், கெயார் நிறுவனப் பிரதி நிதி, மல்லிகைத்தீவு வலயப்பொறுப்பாளா பொன்னமுதன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (08)

## பலநோக்கு மண்டபம் திறப்பு

(முல்லை)

முல்லைத்தீவு புனித இராயப்பர் ஆலயத்தில் பல நோக்கு மண்ட பம் அண்மையில் திறந்து வைக் கப்பட்டது. இம்மண்டபம் அமைப்ப தற்கான நிதியினை இலங்கை இயேசு சபை அகதிகள் பணி நிறு வனம் வழங்கியுள்ளது. (20)

# பெரிய பண்டிவிரிச்சான் ம.வி.யில் மாணவர் பற்சிகிச்சை நிலையம்

(மன்னார்)

கொங்கொங்கின் நிதி உதவி யுடன் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசமான பெரிய பண்டிவிரிச் சான் மகாவித்தியாலயத்தில் மாணவர் பற்சிகிச்சை நிலையம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் மடுவலய கல்விப் பணிப்பாளர் உட்பட பலர் கலந்து கொண்டனர். இந்நிலையம் திறந்துவைக்கப்பட்டதனால் நீண்ட காலமாக நிலவிவந்த மாணவர்க ளின் பல்சம்பந்தமான பிரச்சினை களுக்கு நிவாரணம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (மி)

# ஓமந்தையில் பொது மக்களால் கைவிடப்பட்ட ஆயிரக்கணக்கான கட்டாக்காலி மாடுகள்!

## - உறுதிப்படுத்தினால் பிடிக்க அனுமதி

(வவுனியா செய்தியாளர்)

**சிறிலங்கா இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளின் போது பொது மக்களால் கைவிடப்பட்டுச் சென்ற ஆயிரக்கணக்கான மாடுகள் ஓமந்தைப் பிரதேசத்தில் கட்டாக்காலிகளாக அலைந்து திரிவதாகத் தெரியவந்துள்ளது.**

ஓமந்தைப் பிரதேசத்தில் ஏறத்தாழ 10,000 இற்கும் மேற்பட்ட கட்டாக் காலி மாடுகள் இவ்வாறு உள்ளதாக சிறிலங்கா இராணுவ உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கையை அடுத்து அப்பகுதி யில் இருந்து இடம்பெயர்ந்த மக்களால் கைவிடப்பட்டுச் சென்ற மாடுகளே பெருகி தற்போது ஏறத்தாழ 10,000 இற்கும் மேற் பட்டதாக உள்ளது. இம்மாடுக ளுக்கு அடையாளக்குறி இன்மை யால் தற்போது பலரும் அதற்கு உரிமைகோரி வருகின்றனர். இம் மாடுகளின் உரிமையாளர்கள் தமது அடையாளக் குறிகளை தமது பகுதிக் கிராமசேவை அலுவலகரி டம் உறுதிப்படுத்திக் கொண்டுவந் தால் அம்மாடுகளைப் பிடிக்க அனு மதி அளிக்கப்படும் என அவ் உயா அதிகாரி தெரிவித்துள்ளார். (10)

# கள்ளுத்தவறணையில் இடம் பெற்ற வாய்த்தர்க்கம் அடிதடியில் முடிவுற்றது

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி சந்தைப் பகுதிக்கு அண்மையாக உள்ள கள்ளுத்தவற ணையில் நேற்று முன்தினம் மாலை 2.30 மணியளவில் இரு நபரிடையே இடம் பெற்ற வாய்த்தர்க்கம் இரு குழுக்களாக மாறி அடிதடியில் முடிவுற்றது.

இவர்கள்கள் அருந்திக் கொண்டிருந்த போது போதை உச்சக்கட்டத்தை அடைந்தவுடன் வாய்த்தர்க்கத்தில் இறங்கி மோதலில் ஈடுபட்டனர் இதன்போது பலர் காயமுற்றனர். காயமுற்றவர்கள் வட்டக்கச்சி தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

இச் சம்பவ இடத்திற்கு வட்டக்கச்சி காவல் பணிமனையினர் விரைந்து சென்று தடுத்து நிறுத்தி சண்டையிட்டவர்களை விசாரணை செய்து வருவது குறிப்பிடத்தக்கது. (12)

# பேராசிரியர் அரசுடனான கலந்துரையாடல்

தமிழகத்தில் இருந்து அண்மையில் இலங்கை வந்த பேராசிரியரும், ஊடகவியலாளருமான வீ.அரசு அவர்கள் நேற்று முன்தினம் கிளி நொச்சிக்கு வருகை தந்து வன்னிப்பகுதியில் உள்ள எழுத்தாளர்கள், நாடகக்கலைஞர்கள், ஊடகவியலாளர்கள், கலைத்துறை ஆர்வலர்களை



சந்தித்து கலந்துரையாடினார். தமிழீழ கல்விக்கழக மேஜர் செங்[illegible] நினைவு மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் கலைபண்பாட் டுக்கழகப் பொறுப்பாளர் புதுவைஇரத்தினதுரை, தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன், வெளிச்சம் ஆசிரியர் கருணாகரன் ஆகியோருட்பட பலர் கலந்துகொண்டனர். (லோ)

# கமக்கார அமைப்புக்களின் சம்மேளன நெற் களஞ்சிய கட்டட அடிக்கல் நாட்டல்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்ட கமக்கார அமைப்புக்களின் சம்மேளனத்தின் நெற்களஞ்சிய கட்டடத்துக்கான அடிக கல்நாட்டும் நிகழ்வு கடந்த திங்க ளன்று குமரபுரத்தில் உற்பத்திக் குழுத்தலைவர் மனோகரன் தலைமையில் பி.ப 1.00 மணியள வில் நடைபெற்றது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தி னராக கிளி. அரசஅதிபர் தி.இராச நாயகம் கலந்துகொண்டார். நிகழ் வின் மங்கலவிளக்கினை கண்டா வளை பிரதேச செயலர் சீ.சிவ சொருபநாதபிள்ளை, கிளி.மாவட்ட வேல்ட்விஷன் லங்கா நிறுவன நிகழ்ச்சித் திட்டமுகாமையாளர் த.நைல்ஸ் ஆகியோர் ஏற்றினர். அடுத்து நெற்களஞ்சியத்துக்கான அடிக்கல்லை கிளி.மாவட்ட அரசஅதிபர் நாட்டினார். இந்நிகழ் வில் தமிழீழ பொருண்மிய மேம் பாட்டு விவசாயப்பகுதிப் பொறுப் பாளர் கரிகாலன், வேல்ட்விஷன் பணியாளர்கள், கிராமசேவகர், கமக்கார அமைப்பினர் எனப்பலர் கலந்து கொண்டனர்.

வேல்ட்விஷன் 14லட்சம் ரூபா நிதியுதவியுடன் 70x30 அடி அளவுடைய களஞ்சியமும் 60x20 அடி அளவுடைய களஞ்சியத்தில் ஓர்பகுதி கண்டாவளைப்பிரதேச கமக்கார அமைப்புக்களின் ஒன்றிய அலு வலகமாகவும் அமைக்கப்பட வுள்ளது. (14)

# முன்பள்ளி பிள்ளைகளுக்கென யுனிசெப் விளையாட்டு உபகரணங்கள் வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

முன்பள்ளிகளை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் யுனிசெப் அமைப்பு ஆரம்பப்பிள்ளை பருவ பிள்ளை



களுக்குரிய விளையாட்டு உபகர ணங்களை அன்பளிப்பாக வழங்கி யுள்ளது.

கிளிநொச்சியில் வியாழக்கிழமை மாலை நான்கு மணியளவில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் ஊடாக வன்னியில் உள்ள முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிறுவனத்திற்கு தமிழர் புனர்வாழ்வுக்கழக திட்ட மிடல் பணிப்பாளர் லோறன்ஸ் கிறிஸ்ரியிடம் வன்னி பிராந்திய யுனிசெப் நிகழ்சித்திட்டப் பணிப் பாளர் திருமதி பெனிபுறூன் விளை யாட்டு உபகரணங்களை கைய ளித்தார்.

ஆரம்ப பிள்ளைப்பருவ சிறார் களுக்கென ஊஞ்சல் மற்றும் சீசோ (ஆடல்ப்பலகை) எனபன உள்ளிட்ட 126 விளையாட்டு உபகரணங்கள் இவ்வாறு வழங்கப்பட்டுள்ளன. வன்னிப் பிரதேச முன்பள்ளிகளை மேம்படுத்தும் பல்வேறு அம்சங் கள் கொண்ட யுனிசெப் அமைப்பின ஒரு அம்சமாகவே இந்த விளையாட்டு உபகரணங்கள் கையளிப்பு அமைந் துள்ளமை குறிப்பிடத்தக்கது. (கு)

## திறப்பு விழா

(அலுவலக செய்தியாளர்)

யுனிசெப் நிறுவன நிதி உதவியுடன் ரெக் நிறுவனத்தினால் வடிவமைப்புச் செய்யப்பட்ட அயடீன் உப்பு உற்பத்தி நிலையம் ஆனையிறவில் திறந்து வைக்கப் படவுள்ளது.

நாளை 27ஆம் திகதி செவ் வாய்க்கிழமை காலை 11.00 மணிக்கு ஆனையிறவில் அமைந்துள்ள உப்பு உற்பத்தி நிறுவனத்தில் இந் நிகழ்வு நடைபெறவுள்ளது. (லோ)

# மேலதிக பேருந்துச் சேவை கோரியும் பயனில்லை

(முல்லை)

நாயாற்றில் இருந்து முல்லைத்தீவிற்கு காலையில் மேலதிகமான பயணிகள் பேருந்து சேவை தேவை என அப்பகுதி மக்கள் வேண்டுகை விடுத்துள்ளனர்.

காலை 6.00மணிக்கு நாயாற்றிலிருந்து புறப்படும் பேருந்து உப்புமா வெளியிலிருந்து பயணிகளை ஏற்றாது முல்லைத்தீவை வந்தடை வதால் பாடசாலை மாணவர்கள், உத்தியோகத்தர்கள், ஏனைய பயணிகள் எனப்பலர் அவதிப்படுவதையடுத்தே சம்பந்தப்பட்டவர்களுக்கு இப்பகுதி மக்கள் மகஜர் வழங்கியபோதும் இதுவரை எந்தவிதமான முன்னேற்றமும் இல்லையென மக்கள் தெரிவித்தனர். (20)

## கல்விமாணி கற்கை நெறி

(மன்னார்)

மன்னாரில் ஆசிரிய மாணவர் களிற்கு முதல் முதலாக கல்வி மாணி கற்கை நெறி எதிர்வரும் 31 ஆம் திகதி மன்னார் கல்வி முகாமைத்துவ மண்டபத்தில் ஆரம்பிக்கப்பட உள்ளது.

இதற்கு 72 ஆசிரிய, மாண வர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள னர். இதற்கான அனுமதியை தேசிய நிறுவாக கல்விப்பணிப் பாளர் வழங்கி உள்ளார்.

பயிற்சி நெறிகளை கல்வி நிறுவன்த்தின் தமிழ் பாடத்துறை பொறுப்பாளர் திருமதி எஸ்.சிதம் பரநாதன் நிகழ்த்தவுள்ளார். சகல ஒழுங்குகளையும் மன்னார் வலயக் கல்விப்பணிப்பாளர் ஒழுங்கு செய்துள்ளார். (மி)

# வாய்க்காலை மறித்து படையினர் பாதையமைப்பு

## எழுதுமட்டுவாள் கமக்காரர் அமைப்பு கண்டனம்

(தென்மராட்சி)

**எழுதுமட்டுவாள் வடக்கு ஜெ 334 கிராம அலுவலர் பிரிவில் உள்ள புத்துக்கண்டிக்குளம் மக்கள், நீரோகும் வாய்க்கால்களை மூடி பாதை அமைத்துள்ள படைத் தரப்புக்கு தமது கண்டனத்தைத் தெரிவித்துள்ளதோடு விவசாய செய்கையை மேற்கொள்ள உடனே இப்பாதை அகற்றவும் கோரியுள்ளனர்.**

பாதுகாப்பு வலயத்திற்கு வெளியே செல்லும் ஒரு மைல் வரையான இவ்வாய்க்காலின் குறுக்கே படையினர் பாதை அமைத்துள்ளதால் இப்பகுதியில் விவசாய நடவடிக்கைக்கான நீர் வளத்தை இது தடுத்துள்ளது. இதனால் ஐம்பது ஏக்கர் வயல் நிலங்களில் நீரின்றி பயிர்கள் வாடும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும், பல விவசாய நிலங்கள் நீர் வரத்தின்றி வறண்டுகிடப்பதாகவும் மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது குறித்து யாழ். அரசாங்க அதிபர் கமநல சேவை ஆணையாளர் மற்றும் தென்மராட்சிப் பிரதேச செயலாளர் போன்றவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்றிருந்தும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என எழுதுமட்டுவாள் வடக்கு கமக்காரர் அமைப்புத் தெரிவித்துள்ளது. (28)

## கணினிப் பயிற்சி மையம்

(தென்மராட்சி)

சாவகச்சேரியில் அமைந்துள்ள நவீன சந்தையின் மேல்மாடியில் ரூ. 9 இலட்சம் செலவில் கணினிப் பயிற்சி மையம் அமைக்கப்பட்டுள்ளது. யாழ். குடாநாட்டிலேயே முதல் முறையாக இப்பயிற்சி மையத்தில் தான் (VIT) என்ற தகவல் தொழில்நுட்ப பட்டதாரி பயிற்சி வகுப்புக்கள் இடம்பெற இருக்கின்றன. (VIT) என்ற தகவல் தொழில்நுட்பப் பிரிவு இதுவரை காலமும் கொழும்பு சென்றே படிக்கும் நிலை இருந்தது. முதல் முறையாக சாவகச்சேரியில் தொடங்கப்பட இருக்கிறது. இப்பயிற்சி மையத்திற்கான கணினி உபகரணங்கள், பயிற்சி நெறி ஆசிரியர்களை சாவகச்சேரி நலன் புரிச் சங்கம் வழங்க முன்வந்துள்ளது. இவ்வகுப்புக்கள் விரைவில் தொடங்கப்படவுள்ளது. அத்துடன் நூறு பேர் அமரும் மண்டபமும் இப்பயிற்சி மையத்துடன் அமைக்கப்பட்டுள்ளது. (28)

## யாழ்.மாவட்டதேசியஎழுச்சி பேரவைகளின் சங்கமநிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட தேசியஎழுச்சிப் பேரவைகளின் சங்கமநிகழ்வு நேற்று (25-ம் திகதி) பிற்பகல் 4.00 மணியளவில் யாழ்.நாவலர் மண்டபத்தில் ஆரம்பமானது.

முதல்நிகழ்வாக பொதுச் சுடரினை மாவீரர் ரஞ்சனின் தந்தையார் தம்பிராசாவும் யாழ். மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கயல்விழி, யாழ்.நகர அரசியல்துறைப்பொறுப்பாளர் செழியன், யாழ்.மாவட்டதேசிய எழுச்சிப்பேரவையின் செயலாளர் சிறில் ஆகியோரும் ஏற்றி வைத்தனர்.

அகவணக்கத்தைத் தொடர்ந்து செயலாளர் சிறில்கருத்துரை வழங்கினார்.

யாழ்.மாவட்டமகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் கயல்விழி, நகர அரசியல்துறைப் பொறுப்பாளர் செழியன் ஆகியோரின் சிறப்புரைகளும் இடம்பெற்றன. (36)

## நகரசபை கட்டடத்தை புனரமைக்க நடவடிக்கை

கடந்தகால யுத்த அனர்த்தத்தினால் சிதைவடைந்து போயுள்ள சாவகச்சேரி நகரசபை கட்டடத்தை புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கு 33 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. தற்பொழுது நகரசபை, நகரசபை நூலகத்தின் மேல் மாடியிலேயே இயங்கி வருகிறது. விரைவாக பழைய கட்டிடத்தின் ஒரு பகுதியை புனரமைக்க துரித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது

அத்துடன் நகரசபையின் சுற்று மதில்களும் முற்றாக உடைந்து போயுள்ளதால் அவற்றை திருத்தம் செய்வதற்கும் ரூபா 10 இலட்சம் நிதியும் நகரசபை அலுவலகங்களை பிரிக்கும் உட்புற மதில் சுவர்களை மீண்டும் திருத்திக் கட்டுவதற்கு ரூபா 4 இலட்சத்து 55 ஆயிரம் ரூபா நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளதாக நகரசபைத் தலைவர் மு.செ.சரவணபவ அவர்கள் தெரிவித்துள்ளார். (28)

## வரட்சியால் பாதிப்பு

(கொழும்பு)

பொலநறுவை பராக்கிரம சமுத்திரம் கடும் வரட்சியினால் வற்றிப்போய் உள்ளதால் அங்கு விவசாயம் செய்யும் 20,000 குடும்பங்கள் கடும் பாதிப்படைந்துள்ளன என பொலநறுவை நீர்ப்பாசனத் திணைக்களப் பொறியியலாளர் சமன் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

## பொதுமண்டபம் அமைக்க ஏற்பாடு

(தென்மராட்சி)

போரினால் பாதிக்கப்பட்ட தென்மராட்சிப் பகுதிகளில், பொது மண்டபங்களை மக்களுக்கு கட்டித்தர கரீத்தாஸ் என்ற தனியார் தொண்டு நிறுவனம் முன்வந்துள்ளது. இதற்கு அமைவாக தென்மராட்சிப் பிரதேச செயலகத்துடன் இணைந்து இந்த நிறுவனம் பொது மண்டபங்களை கட்டுவதற்கு இடங்களை தேர்ந்தெடுத்துள்ளன. கைதடி, நாவற்குழி கரம்பைக் குறிஞ்சி, கொடிகாமம் தெற்கு, சங்கத்தானை, சரசாலை தெற்கு போன்ற இடங்களில் இப்பொது மண்டபங்கள் விரைவில் அமைக்கப்படவுள்ளன எனத்தெரிய வருகிறது. (28)

## வீதி திருத்தப்படவில்லை மக்கள் விசனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரிலுள்ள மணிக்கூட்டு வீதி நீண்ட காலமாக புனரமைக்கப்படாது சேதமடைந்த நிலையில் காணப்படுவதால் அவ் வீதியூடாக பயணம் செய்வோர் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர். ஸ்ரான்லி வீதிக்கும் - நாவலர் வீதிக்கும் குறுக்காக அமைந்துள்ள மேற்படி வீதியின் சீரற்ற தன்மை காரணமாக இவ் வீதியில் விபத்துக்கள் ஏற்படும் அபாயமும் ஏற்பட்டுள்ளது. மிக நீண்ட காலமாக இவ் வீதி சேதமடைந்த நிலையில் காணப்படுகின்ற போதும் யாழ். மாநகர சபையினரால் உரிய நடவடிக்கைகள் துரிதமாக எடுக்கப்படாமை குறித்து மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (33)

## மீளக்குடியேறிய மக்களின் பிரச்சினை குறித்து தென்மராட்சிப் பிரதேச தே.எ.பேரவை ஆய்வு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையினரால் தென்மராட்சி தெற்கில் உள்ள இராணுவ அதிஉயர் பாதுகாப்பு வலயங்களை அண்மித்துக் குடியேறியுள்ள மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக ஆய்வு செய்யப்பட்டு வருகிறன.

மேற்படி பிரதேசத்தில் படையினரால் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட இடங்களில் குடியேறியுள்ள மக்கள் சோதனை நடைமுறை, பாஸ் நடைமுறை, நேரக்கட்டுப்பாட்டு விதிமுறை போன்ற பல்வேறு கெடுபிடிகளுக்கும் ஆளாகி வருகின்றனர்.

எனவே இவ்வாறாக மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்து அவற்றினால் மக்கள் படும் வேதனைகளை வெளிப்படுத்துவதன் மூலம் மக்களது பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் முகமாகவே இவ்ஆய்வுகள் மேற்கொள்ளப்படுவதாக தேசிய எழுச்சிப் பேரவையினர் தெரிவித்தனர். (33)

## சாவகச்சேரி சந்தையைச் சுற்றி பாதுகாப்பு வேலி அமைப்பு

சாவகச்சேரி நகரின் மையத்தில் அமைந்துள்ள சந்தைப்பகுதியை பாதுகாக்க வேலியை சாவகச்சேரி நகரசபை அமைக்க முடிவு செய்துள்ளது. இதற்கென ஒரு இலட்சத்து 95 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. கால்நடைகள் தொல்லை திருட்டுச் சம்பவங்கள் போன்றவற்றைத் தடுப்பதற்காகவே இவ்வேலி அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது. (28)

## -யாழ்-புத்தூர் பகுதியில்- மிதிவெடி அகற்றும் பணியை ஹலோரஸ் ஆரம்பித்தது

(யாழ்ப்பாணம்)

யாழ். புத்தூர் பிரதேசத்தில் உள்ள விவசாயக்காணிகளில் மிதிவெடிகளை அகற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகிறன.

கடந்தகால இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளின் போது மேற்ப்படி பிரதேசத்தில் உள்ள விவசாயக் காணிகளில் புதைத்து வைக்கப்பட்டிருந்த மிதிவெடிகள் அகற்றப்படாமையால் அப்பகுதி விவசாயிகளின் தொழில் நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள பாதிப்புக்களை கவனத்தில் கொண்டே இப் பிரதேச விவசாய நிலங்களில் இருந்து மிதிவெடிகளை அகற்றும் நடவடிக்கைகளை ஹலோரஸ் அணியினர் மேற்கொண்டு வருகின்றனர். (33)

## புத்தூரில் 101 சிறார்கள் கல்வியை இடைநிறுத்தினர்

(யாழ்ப்பாணம்)

யாழ். புத்தூர் கிராமத்தில் 101 சிறார்கள் வறுமை காரணமாக தமது கல்வியை இடைநிறுத்தியுள்ளதாக தெரியவருகிறது.

கடந்த கால இராணுவ ஆக்கிரமிப்புகள் மற்றும் இடப்பெயர்வுகளால் ஏற்பட்ட வறுமை காரணமாகவே இச் சிறார்கள் கல்வியை இடைநிறுத்தியுள்ளனர்.

தமது கல்வியை இடைநிறுத்தியுள்ள சிறார்களுக்கு உதவ திருப்திகரமான நடவடிக்கைகள் எதுவும் அப் பகுதியில் மேற்கொள்ளப்படவில்லை.

இதனால் இப்பிரதேச சிறார்களின் கல்வி எதிர்காலம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. (33)

## ஆங்கில ஆசிரியர்களின் தரத்தை மேம்படுத்த பயிற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டுப் பாடசாலைகளில் பயிற்றுவித்து வரும் ஆங்கில ஆசிரியர்களின் தரத்தினை மேம்படுத்துவதற்கு ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

யாழ். குடாநாட்டுப் பாடசாலைகளில் பயிற்றுவித்து வரும் ஆங்கில பாட ஆசிரியர்களுக்குத் துறைசார் அறிவு போதாதிருப்பதனால் மாணவர்கள் எதிர் கொள்ளும் பின்னடைவுகளை கவனத்தில் கொண்டே ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் இதற்குரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இதனடிப்படையில் முதற்கட்டமாக தற்பொழுது சேவையில் உள்ள ஆசிரியர்களுக்கு துறைசார் பயிற்சிகளை வழங்குவதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (33)

## பின்தங்கிய கிராமங்கள் அபிவிருத்தி செய்ய முடிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.சுண்ணாகம், வடமராட்சி தெற்கு நல்லூர் ஆகிய பிரதேசங்களில் உள்ள பின்தங்கிய கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

மேற்படி பிரதேசங்களில் உள்ள யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை தெரிவு செய்தே இவ்வாறான அபிவிருத்தி திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என யாழ். அரச செயலக வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்பிரகாரம் இவ்வாறான போரினால் பாதிக்கப்பட்ட கிராமங்களில் வாழும் மக்களுக்கு புனர்வாழ்வழிக்கப்படவுள்ளது.(33)

## யாழ். தொழில் நுட்பக்கல்லூரியை அபிவிருத்தி செய்யத்திட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். தொழில்நுட்பக் கல்லூரியினை சுமார் 2.5 மில்லியன் ரூபா செலவில் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

கடந்தகால யுத்தத்தினால் பாதிக்கப்பட்டிருந்த மேற்படி தொழில் நுட்பக்கல்லூரியில் மாணவர்களின் கற்றலுக்கான அடிப்படை வசதிகள் போதாதிருந்தது. இதனால் இங்கு பயின்று வரும் மாணவர்கள் எதிர் கொள்ளும் பின்னடைவுகளைக் கருத்தில் கொண்டே இவ்வாறான அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதனடிப்படையில் இந்நிதியின் மூலம் கல்லூரியில் கற்றலுக்கான தளபாட மற்றும் உபகரண வசதிகள் என்பன அபிவிருத்தி செய்யப் படவுள்ளது (33)



பொது மக்களின் தீர்ப்பை ஏற்று இப்போதாவது சந்திரிகா பதவி

ஆயினும் 2004 ஆம் ஆண்டு தீர்ப்பைத் தியவன்னா ஓயா நதிக்கு இட்டுச் சென்றுள்ள சந்திரிகா 2001, 2002 ஐ.தே. கட்சி பெற்ற தீர்ப்பை காலி முகத்திடல் கடலில் மூழ்கடித்த பழைய பாவத்தினால் ஆகும். இந்தப் பாவச் செயலுக்கு காரணமாய் அமைந்தது ஜே.ஆர். இன் 'அரசியல் அமைப்பு முறையாகும்.

கொண்டு வரமுடியாமல் போனதை 2001 ஆம் ஆண்டிலும், 2002 ஆம் ஆண்டிலும் மக்கள் ஆணையைப் பெற்று அரசமைத்து அதனை தக்கவைக்க முடியாது போனபோதே ஐ.தே.கட்சி அதனை உணரமுடிந்தது.

தனக்குத் தேவையான போது பாராளுமன்றைக் கலைப்பேன் எனக் கூறிக்கொண்டு மக்கள் ஆணையைப் பெற்ற ஐ.தே. கட்சியை மட்டுமன்றி ஆட்சி இயந்திரமும் அச்சுறுத்தப்பட்டது. அமைச்சுக்களை பறிப்பதாகக் கூறி, அமைச்சர்கள் அச்சுறுத்தப்பட்டனர். பாதுகாப்பு அதிகாரிகள் பணியாற்றியது நிறைவேற்றதிகாரம் கொண்ட சனாதிபதி முறைக்கேற்ற வகையிலேயே. தனது அதிகாரத்தினால் பதவி வழங்கப்பட்ட பாது

அரசை துரத்தி விட்டு அடாவடித்தனமாக ஆட்சி அமைத்திருக்கும் பாவமாகும்.

"ஆனால் ஆனைக் கொரு காலம் என்றால் பூனைக்கொரு காலம் இல்லாமல் போகாது" இந்த வாசகம் நினைவிற்கு வருவது இப்போது பூனையின் காலமாகும் என்பதாலேயே.

அன்று காலிமுகக் கடல் இன்று தியவன்னாவ ஓயா அன்று சனாதிபதி, இன்று சபாநாயகர்.

சனாதிபதி சந்திரிகா தனது நிறைவேற்றதிகாரத்தை வைத்து நடவடிக்கைகளை, எடுத்து இறுதியில் தனது ஐ.ம.சு. முன்னணியையும் ஆட்சி பீடம் ஏற்றி விட்டார்.

வருடங்கள் பூர்த்தியாகி உள்ளது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி ஆட்சிக்கு 26 வருடங்கள் பூர்த்தியாகி உள்ளது. லொக்குபண்டார ஜே.ஆர். ஜயவர்த்தனவினால் வளர்த்தெடுக்கப்பட்டபிள்ளை. இந்தப் பிள்ளைகளுக்கு தகப்பனாகிய ஜே.ஆர். ஜயவர்தன கொண்டு வந்துள்ள நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி சட்டத்திற்கு எதிராக செயல்படவேண்டிய நிலைக்கு தற்போதைய சபாநாயகர் லொக்கு பண்டார தள்ளப்பட்டுள்ளார். லொக்கு பண்டார மட்டும் அல்ல, முழு ஐக்கிய தேசிய கட்சியும் அவரின் யாப்புக்கு எதிராக செயல்பட வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. அதாவது பொது சன ஐக்கிய முன்னணியினருக்கு பிடித்து தொங்கிக் கொள்வதற்கு கயிறு இல்லாத வேளையில் ஜே.ஆர்.ஜயவர்தனாவின் அரசியலமைப்புக் கயிறு அவர்களுக்கு தற்பொழுது உதவி செய்துள்ளது. எனவே பொது சன ஐக்கிய முன்னணியினர் இவருக்கு நன்றி கடன் செலுத்த வேண்டும். ஐக்கிய தேசிய கட்சி 2001 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தபொழுது

# தென்னிலங்கை ஆட்சியாளரைப் பிடித்தாட்டும் ஜே.ஆரின் அரசியல் யாப்பு

விலக வேண்டுமென 2002 ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலின் பின்னும் சபாநாயகர் இப்போது பொது

அதே போல இன்று சபாநாயகர் லொக்குபண்டாரவுக்கும் நிறைவேற்று அதிகார சனாதிபதிக்கு எதிராகவும்



ஜே.ஆர்.இன் நாட்குறிப்பேட்டில் இருந்து சில பகுதிகள் இங்கு தரப்படுகிறது.

1977 ஆகஸ்ட் 05: இன்னும் பெருந்தொகையினர் வீட்டுக்கு வருகிறார்கள். 10.00 மணியில் இருந்து 2.00 மணிவரை காரியாலயத்தில் பணியாற்றினேன். 1978 ஆம் ஆண்டு புதிய அரசியல் அமைப்பொன்றை உருவாக்க வேண்டுமெனக் கூறினேன். இது தொடர்பாக சட்டத்தரணி மார்க்பெர்னாண்டோவுடன் பேசினேன்.

காப்பு (இராணுவம்) அதிகாரிகளை மக்கள் ஆணையைப் பெற்றுவந்த ஆளும் கட்சி பதவி நீக்க முடியாது போனது. அத்துடன் சனாதிபதியால் நியமிக்கப்பட்ட உயர்நீதிமன்ற நீதிபதியின் உத்தரவிற கேற்பவே ஆளும் கட்சியான ஐ.தே. கட்சியும் நடந்துகொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. 1994 ஆம் ஆண்டு பதவிக்கு வந்த பொ.ஐ.முன்னணி அரசின் ஊழல் மோசடிகளை விசாரிக்க முடியாமல் போனதும், ஆணைக்குழுவின் அதிகாரம் சனாதிபதியிடம் இருந்தமையே காரணமாகும்.

பிரதம நீதியரசருக்கெதிராகவும், எந்த ஒரு அமைச்சருக்கோ, எம்பிக்கோ எதிரான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவோ ஜே.ஆரின் அரசமைப்பின்படி அதிகாரம் உள்ளது. சபாநாயகர் ஐ.தே.முன்னணி உறுப்பினராக இருப்பதும் இங்கு குறிப்பிடல் வேண்டும்.

அவர் அரசியலுக்கு வந்தது டி.எஸ் சேன



லொக்குபண்டார

மக்களின் தீர்ப்புக்கேற்ப பதவி விலக வேண்டும் என மாகாண சபைத் தேர்தலின் பின்னும் கோரிக்கைகள் பரஸ்பரம் முன்வைக்கப்பட்டன. ஆயினும் இவை இரண்டுமே நடைமுறைச் சாத்திய மற்றதாகி விட்டது. அதாவது அவ்வாறு பதவிவிலகி ஒரு கனவானாக (GENTLEMAN) மாற இருவரும் கருதவில்லை.

2001 ஆம் ஆண்டும், 2002ஆம் ஆண்டும் மக்கள் வழங்கிய ஆணையை தியவன்னாவ ஆற்றில் விடலாமா? ஜே.ஆர். இன் அரசியல் அமைப்பின்படி அப்படி விடலாம். அதேபோல் காலி முகத்திடல் கடலிலும் விட்டு விடலாம்.

2001 ஆம் ஆண்டு கிடைக்கப் பெற்ற மக்கள் ஆணையை காலி முகத்திடலுக்கெதிராக இருக்கும் சனாதிபதி மாளிகையே விழுங்கி விட்டிருக்கிறது. அது சனாதிபதி அமைச்சுக்கள் மூன்றையும் பறித்த அன்றே நடந்ததாகும். அது போல் 2004 இல் கிடைக்கப்பெற்ற மக்கள் தீர்ப்பு தியவன்னாவ நதிபெருக்கெடுக்கும் போது அடித்துச் செல்லப்பட்டு விடுமா? அது பற்றி இப்போது கூறுவதற்கில்லை.

இக்குறிப்புக்கள் அன்று அரசியல் அமைப்பை மாற்றிய ஜே.ஆர். இன் நிலைபற்றிய சிறுகுறிப்பெனலாம். இந்த அரசமைப்பு மாற்றத்துக்காக அவருக்கு உறுதுணையாக இருந்தவர் மார்க்பெர்னாண்டோ என்ற சட்டத்தரணி ஆவார். ஆலோசனைக்குழுவில் பிரேமதாசா, லலித், ரொனிடிமெல், காமினி திஸாநாயக்க ஆகியோர் இருந்தனர். ரொனியைத் தவிர ஏனையோர் இதே அரசமைப்பின் மூலம் வீழ்ச்சியடைந்தனர். ரொனிடிமெல்லுக்கு நிதியமைச்சுப் பதவியில் வெறுப்பேற்பட்டதும் இதே அரசியல் அமைப்பினாலும் அதனால் நாட்டில் ஏற்பட்ட குழப்ப நிலையாலுமே. அத்துடன் சகல தகுதியிருந்தும் பின்னர் பிரதம நீதியரசராக பதவி உயர்வு பெற மார்க்பெர்னாண்டோவுக்கு தடையாக விருந்ததும் இதே அரசியல் அமைப்பாகும். அதாவது இவற்றுக்கு முக்கிய காரணமாகவிருந்தது நிறைவேற்று அதிகார சனாதிபதியாகும்.

அரசியலமைப்பை உருவாக்கியவர்களே அதன் பாவத்தை அனுபவித்தனர். இவ்வாறு அனுபவிக்கும் பாவத்தை முடிவுக்குக்

அமைச்சரவையில் மாற்றத்தை ஏற்படுத்த ஒரு நாளை ஒதுக்கித் தரக் கேட்பதும் கூட குதிரைக் கொம்பாக இருந்தது. காணி பகிர்ந்தளிப்பு, சனாதிபதி ஆணைக் குழுவை நீக்குதல் போன்ற ஐ.தே.க வின் பிரேரணைகள் கூட சனாதிபதியால் நிராகரிக்கப்பட்டது. நாடு ஆபத்தை நோக்கி செல்வதாகக் கூறி மூன்று அமைச்சுக்களையும் சனாதிபதி சுவீகரித்தார். அரச ஊடகத்தின் மூலமாகவே ஆளும் கட்சி தாக்கப்பட்டது. இறுதியாக பாராளுமன்றம் கலைக்கப்பட்டு, தேர்தலும் நடந்து முடிந்ததும் முடியாமலும் இருக்கின்றது. இவை அனைத்திற்கும் காரணம் ஜே.ஆர். இன் அரசியல் அமைப்பாகும்.

ஆனால் இன்று அதன் மறுதலையாக செயல்கள் நடைபெறுகின்றன. அதாவது நிறைவேற்று அதிகார, சனாதிபதியின் முறையின் மூலம் ஐ.தே.முன்னணியை துரத்தி விட்டு ஆட்சிப் பீடத்தைக் கொழுவிக்கொண்டிருக்கும் ஐ.ம.சு கூட்டணிக்கு மக்கள் அளித்த தீர்ப்பை மேற்சொன்ன தியவன்னாவ ஓயாவில் கரைத்து விடும் நிலை ஏற்பட்டுள்ளது. சுருக்கமாகக் கூறினால் அது ஐ.தே.முன்னணி

னாயக்காவை பற்றி எழுதாமல் எஸ்.டபிள்யூ ஆர்.டி பண்டார நாயக்காவைப் பற்றி எழுதியே அரசியலுக்கு வந்தார். இதனால் கவரப்பட்ட ஜே.ஆர். இவரை சந்திக்க வருமாறு கேட்டார். அப்போது லொக்கு பண்டார ஒரு மாணவனாக இருந்தார். அவர் ஒரு சட்டத்தரணியாக பரிணமித்த போது அரசியலுக்கு வந்து தேர்தலில் நிற்குமாறு ஜே.ஆர்.கேட்ட போது அம்மாவை கேட்டு சொல்வதாகக் கூறினார். அவர் அவ்வாறு கூறிபின்னர் அரசியலில் இணைந்து தேர்தலில் நின்ற போது எதிர்காலம் பற்றி சிந்தித்து அம்மா வைக் கேட்டு அரசியலுக்கு வந்த உத்தமனுக்கு வாக்களிக்குமாறு ஜே. ஆர். மக்களை கேட்டார். அதன் காரணமாக அவர் பாராளுமன்ற உறுப்பினரானார். அவரை சிறந்த அரசியல் வாதியாக்கியவர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவே. காட்டு மரம் ஒன்றை வீழ்த்த இன்னும் ஒரு மரத்தையே பயன்படுத்துவது போன்று லொக்கு பண்டாரவை பயன்படுத்தி பிரேமதாசாவை ஜெயவர்த்தனா கட்டுக்குள் வைத்திருந்தார்.

சபாநாயகர் லொக்குபண்டார அரசியலில் பிரவேசித்து 27

நிறைவேற்று அதிகாரம் சனாதிபதி வசம் இருந்ததால் ஐக்கிய தேசியக் கட்சியை சந்திரிகா ஆட்டி வைத்தார். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சி செய்தாலும் பெரும்பான்மைபலம் எதிர்கட்சியினரிடமே உண்டு. தற்பொழுது ஐக்கிய தேசிய முன்னணி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினரை ஆட்டிப்படைக் கின்றது. தற்பொழுது நாட்டில் உள்ள மக்கள் அனைவரும் நடக்க முடி

**உப்புள் ஜோசப் பர்ணாந்து**
**(லங்காதீப)**
**மொழியாக்கம்-வடிவேல்**

யாத வலு விழுந்தவர்களுக்கு சமம் என சமீபத்தில் கூறியது பொருத்தமானதாகவுள்ளது. நடக்க முடியாதவன் குருடனின் தோளில் சவாரி செய்வதற்கு சமமானதாக சபாநாயகர் பதவி உள்ளதென்றபடியால் நடப்பது மிக கஷ்டமான காரியமாக லொக்கு பண்டாரவுக்கு ஏற்பட்டுள்ளது. இன்று பாராளுமன்ற ஆட்சியும், எதிர்க்கட்சியின் எதிர்ப்பும் முடவனும், குருடனும் பிரயாணம் செய்யும் கதையாகவே அமைந்துள்ளது.

# தேர்தல் முறைமை மாற்றப்பட்டிருந்தால் மூன்றிலிரண்டு பெரும்பான்மை கிடைத்திருக்கும்

## -அமைச்சர் அநுரா கூறுகின்றார்

(கொழும்பு)

இந்தியா, அவுஷ்திரேலிய நாடுகளில் நிலவும் தேர்தல் முறை போன்று சிறிலங்காவிலும் நடைபெற்றிருக்குமாயின் தமது கட்சி மூன்றிலிரண்டு பெரும்பான்மையை எட்டியிருக்கும் என்று ஐ.ம.சு.மு அரசின் கைத்தொழில், உல்லாசப் பயணத்துறை, முதலீட்டுத்துறை அமைச்சரான அநுர பண்டாரநாயக்க தெரிவித்திருக்கிறார்.

சிங்கப்பூர் சிறிலங்கா நாடுகளின் கூட்டு முயற்சியில் பொலநறுவையில் அமைக்கப்படவிருக்கும் உல்லாசப் பயண விடுதிக்கான அடிக்கல் நாட்டும் வைபவத்தில் உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது.

நாட்டின் இனப்பிரச்சினைக்கு சுமுகமான முறையில் தீர்வு காணப்படும் எனக் கூறிய அவர் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக தெரிவித்துள்ளார். அண்மையில் கொழும்பில் நடைபெற்ற குண்டு வெடிப்பை மீண்டும் யுத்தம் ஒன்றின் அறிகுறியாக மதிப்பிடக் கூடாது என்றும் விடுதலைப் புலிகள் சமாதானத் தில் அக்கறை கொண்டுள்ளதையும் குறிப்பிட்டுள்ளார்.

# மன்னாரில் 4 தமிழ் பொலிஸ் உதவி அதிகாரிகள் இடமாற்றம்

மன்னார் மாவட்டத்தில் கடமையாற்றிய நான்கு தமிழ் பொலிஸ் உதவி அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

இப் பொலிஸ் அதிகாரிகள் மாற்றம் செய்யப்படவுள்ளமையால் தமிழ் மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர் கொள்ள வேண்டிய சூழல் ஏற்படாலம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே தமிழ் மக்களால் மேற்கொள்ளப்படும் குற்றப் பதிவுகளை பதிவு செய்வதில் பெரும்பான்மை இனத்தினைச் சேர்ந்த பொலிசார் ஈடுபட்டு வருவதால் மக்கள் பெரும நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர். இந்நிலையில் இத் தமிழ் உதவி அதிகாரிகள் மாற்றம் பெறுவதால் பெரும் சிரமம் ஏற்படும் என்றும் மக்கள் தெரிவிக்கின்றனர்.



# கடந்த வாரத்தில்

**15.07.2004-21.07.2004**

## 15.

★இரண்டாவது உலக மகாயுத்தத்தின் போது நாகசாகி நகரின் மீது அணுகுண்டை வீசியவரான ஓய்வுபெற்ற இராணுவ ஜெனரல் சார்ள்ஸ் ஸ்வீனி 82 வயதில் காலமானார்.

★பாகிஸ்தானுக்கு விஜயம் செய்த அமெரிக்க பிரதி இராஜாங்க அமைச்சர் ரிச்சட் ஆர்மிரேஜ் பயங்கரவாதத்தை முறியடிப்பது தொடர்பாக பாகிஸ்தான் அதிகாரிகளுடன் பேச்சுநடத்தினார்.

★ஈராக் நகரான ஹெடித்தாவில் இடம்பெற்ற கார்க்குண்டுவெடிப்பில் 3 ஈராக்கிய பொலிசார் கொல்லப்பட்டனர். 9பேர் காயம்.

★பாக்தாத்திற்கு வடக்கே உள்ள ஹதிதா நகரில் இடம்பெற்ற தற்கொலை கார்க் குண்டுத் தாக்குதலில் 10 பேர் பலி.

★மியான்மாரின் மியாமி நகரில் வைர விற்பனை கடையிலிருந்து ரூபா 368 கோடி பெறுமதியான வைரம் கொள்ளையடிக்கப்பட்டது.

## 16.

★இந்தியாவின் அசாம் மாநிலத்தில் இடம்பால் நகரில் பராஇராணுவத் துருப்புக்களால் பெண் ஒருவர் கொல்லப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்திய இராணுவச் சாவடிக்கு வெளிப்புறம் பதாதையுடன் பெண்கள் குழு நிர்வாணமாக ஆர்ப்பாட்டம்.

★கும்பகோணத்தில் உள்ள தனியார் பாடசாலை ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 80 பாலகர்கள் உடல் கருகிப் பலி. பலர் படுகாயம்.



கோரத் தீ விபத்து

★இந்தியாவின் காஷ்மீரில் பயணிகள் பஸ்வண்டி ஒன்று பாதையிலிருந்து விலகி விபத்திற்குள்ளானதில் 15 பேர் கொல்லப் பட்டனர்.

## 17.

★பாக்தாத்தில் தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 10பேர் பலி. பலர் படுகாயம்.

★கலிபோர்னில் ரெமிகுலா கிழக்கில் உள்ள கொலேற்றியஸ் பிறிவ் என்ற இடத்தில் காட்டுத்தீ ஏற்பட்டது.



காட்டுத்தீயால் எழும் புகை

## 18.

★நீண்டகாலமாக தேடப்பட்டு வந்த தீவிரவாத அமைப்பு ஒன்றின் தலைவர் உள்ளிட்ட ஏழு பேர் பாகிஸ்தான் பொலிசாரால் சுட்டுக்கொலை.

★ஈராக்கில் பலூஜா நகரில் அமெரிக்க விமானங்கள் நடத்திய தாக்குதலில் 14 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

★அமெரிக்க இராணுவத்தில் இருந்து தப்பியோடி வடகொரியாவில் வசித்து வந்த சார்லஸ் ஜென்கின்ஸ மருத்துவ சிகிச்சையை பெறுவதற்காக ஜப்பான் வந்தடைந்தார்.

★19பேரைப் படுகொலை செய்த தென் கொரியாவைச் சேர்ந்த நபர் தென் கொரிய பொலிசாரால் கைதுசெய்யப்பட்டார்.

## 19.

★பாக்தாத்தில் பொலிஸ் நிலையத்திற்கு அருகில் தற்கொலைக் குண்டுதாரியின் தாக்குதலில் 10 பேர் பலி. 50 பேர் காயம்.



தாக்குதலின் பின்

★கிராஸ்னொலிமன்ஸ்கா கரிச்சுரங்கத்தில் வாயுக்கருவி வெடித்துச் சிதறியதில் 21பேர் உயிரிழந்தனர்.

★உக்ரெயினில் நிலக்கரிச்சுரங்கம் ஒன்றில் ஏற்பட்ட வெடிப்பு ஒன்று காரணமாக 20 தொழிலாளர் கொல்லப்பட்டனர்.



மீட்புப் படையினர்

★இஸ்ரேல் ஹெலிகொப்ரர்கள் காஸா நகருக்கு அருகில் உள்ள அகதி முகாம் மீது நடத்திய தாக்குதலில் 5 பொது மக்கள் காயம்.



இடர்பாடுகளிடையே தாயும் மகனும்

## 20.

★இஸ்ரேலின் தலைநகர் டெல்அவிவில் வைத்து அந்நாட்டு மாவட்ட நீதிபதி அலிசார் சுட்டுக்கொல்லப்பட்டார்.

## 21.

★ஈராக்கில் அமெரிக்க கூட்டுப்படையினருக்கும், தீவிரவாதிகளுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் 25 கெரில்லாக்கள் கொல்லப்பட்டனர். 17 பேர் காயமடைந்தனர். 25 பேர் பிடிக்கப்பட்டனர்.

# எல்லைப்படை மாவீரர்களின் துணைவியர் மூவருக்கு தையல் இயந்திரம் வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

தாயகப் போரில் வீரச்சாவடைந்த எல்லைப்படை மாவீரர்களின் துணைவியர் மூவருக்கு தையல் இயந்திரம் அன்பளிப்புச் செய்யப் பட்டன.

நேற்றுக்காலை 9.00 மணியளவில் கிளிநொச்சி அரசாங்க அதிபரின் பணிமனையில் வைத்து இத்தையல் இயந்திரங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

குடும்ப உழைப்பாளிகளை இழந்து தமது அன்றாட வாழ்வாதாரத்திற்காக கஷ்ர நிலையை எதிர்நோக்கி வந்த இக் குடும்பங்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு இவ் இளம் விதவைகளுக்கு தையல் இயந்திரங்கள் அன்பளிப்புச் செய்யப் பட்டன.

இத் தையல் இயந்திரங்களை புங்குடுதீவு அருள்மிகு அந்தோனியார் தெய்வக்குழந்தைகள் இல்லத்தின் நிதி உதவியுடன் கிளிநொச்சி அரசாங்க அதிபரின் அனுசரணையோடு வழங்கியது. கிளிநொச்சி அரசாங்க அதிபர் இராசநாயகம், கரைச்சிப் பிரதேச செயலர் பொன்.நித்தியானந்தம், கிளிநொச்சி மாவட்ட மாவீரர் குடும்பநலன் காப்பகப் பொறுப்பாளர் முத்தன் தையல் இயந்திரங்களை வழங்கினார். (ச)



# சாரதிகள் விதிமுறைகளை பின்பற்றி நடக்க அறிவுறுத்து

(அலுவலக செய்தியாளர்)

மாவட்ட நிதிமன்றத்தின் வளாகம் முன்பாக ஒலி (கோர்ன்) எழுப்பிச் செல்லும் வாகன சாரதிகள் மீது சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றம் அமைந்திருக்கும் பகுதியை அண்மிக்கும் போதே இருபகுதிகளிலும் "நீதிமன்றம் அமைதி" என்ற வீதிக் குறியீடு பொருத்தப்பட்டுள்ளது. இதனைக் கருத்தில் கொள்ளாமல் ஒலி எழுப்பும் சாரதிகள் மீது சட்ட நடவடிக்கைகள் எடுத்துவருவதாகத் தமிழீழ காவல் துறையின் வீதிப் போக்குவரத்து பிரிவினர் அறிவித்துள்ளனர். அத்துடன் கிளிநொச்சி நகரப்பகுதியை அண்மிக்கும் வாகனங்களின் வேகங்களை குறைப்பதற்காக கரடிப்போக்குச் சந்தி முன்பாக வேகம் 40கி.மீ. என்ற வீதிக் குறியீட்டையும் அதேபோன்று புளியங்குளம் பகுதியிலிருந்து வரும்போது இரணைமடுச் சந்திப்பகுதியில் வேகம் 40கி.மீ. என்ற வீதிக்குறியீட்டையும் வீதியில் பொருத்தியிருக்கின்றோம். இதனைப் பொருட்படுத்தாது நகரப்பகுதிக்குள் வேகமாக வாகனங்களை செலுத்துபவர்கள் மீது சட்ட நடவடிக்கையினை மேற்கொண்டு வருகின்றோம் என்றும் காவல்துறையின் வீதிப்போக்குவரத்துப் பிரிவினர் அறிவித்துள்ளனர். (சோ,கு)

# சிறுபோக நெற்செய்கை பாதிப்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி கண்ணன் குளத்தில் நீர்வற்றியதால் சிறுபோக நெற்செய்கை பாதிப்படைந்துள்ளது.

இது பற்றி மேலும் தெரியவருவதாவது கண்ணன் குளத்தின் நீரினைப் பெற்றுப் பயிர்ச்செய்கை மேற்கொண்டுவரும் விவசாயிகளின் நூற்றுக்கு மேற்பட்ட ஏக்கர் பயிர் நிலங்கள் தற்போது குளத்தில் நீர் வற்றி உள்ளதால் அழிந்துபோகும் நிலை எதிர்கொள்ளப்பட்டுள்ளது.

இதனால் விவசாயிகள் பெரும் கவலையடைந்துள்ளதைக் காணக் கூடியதாக உள்ளது. (சோ,கு)

# பிரதான வீதிகளில் தடுப்பு அணைகள் போக்குவரத்துக்கு பெரும் இடையூறு

## - விபத்துக்கள் நேரலாமென அச்சம்

பிரதான வீதிகளில் தன்னிச்சையான போக்கில் தடுப்பு அணைகள் இடப்பட்டு வருவதால் வீதிப் போக்குவரத்து பெரும் ஆபத்தானதாக மாறி வருவதையிட்டு பயணிகள் மிகுந்த விசனமடைந்துள்ளனர்.

கிளிநொச்சி நகரிலிருந்து வட்டக்கச்சி செல்லும் பிரதான வீதியிலும், இரணைமடு செல்லும் பிரதான வீதியிலும் இவ்வாறான தடுப்பு அணைகள் தன்னிச்சையான போக்கில் அமைக்கப்பட்டுள்ளன.

வட்டக்கச்சி செல்லும் பிரதான வீதியில் கோவிந்தன் கடைச் சந்தித்திருப்பத்தில் தொடர்ச்சியாக சில தடுப்பு அணைகள் இடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தடுப்பு அணைகளால் வாகன விபத்துக்கள் ஏற்படக் கூடிய அபாய நிலை காணப்படுகின்றதுடன் பயணிகள் பெரும் அசௌகரியத்துக்கு உள்ளாகியும் வருகின்றனர்.

எனவே தன்னிச்சையான போக்கில் பிரதான வீதிகளில் போடப்படும் இவ்வாறான தடுப்பு அணைகள் அகற்றப்படுவதுடன் மேற்கொண்டு தடுப்புக் அணைகள் போடப்படாது தடுக்குமாறு சம்பந்தப்பட்ட தரப்பினர்களிடம் மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# கனகராயன்குளம் வடக்கில் முன்பள்ளி இன்று திறப்பு

கனகராயன் குளம் வடக்கில் அமைக்கப்பட்டுள்ள பாரதி முன்பள்ளியின் திறப்பு விழா இன்று காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

டென்மார்க் கிறீன்ஸ் றெட், பீல்லூன்ட், உள்குல் ஆகிய நகரங்களில் வாழும் ஈழத்தமிழர்களால் நடாத்தப்படும் தமிழர் கலாசார கலையகத்தின் நிதியுதவியுடன், தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தாலும், வவுனியா வடக்கு முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத்தினதும் அனுசரணையுடன் நெடுங்கேணி அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தினால் இம்முன்பள்ளி அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தமிழீழ சமூகக்கல்வியும் வரலாறும் தேர்வு - 2003 முடிவுகள்

## தேசிய மட்டம்

| தரம் | பெயர் | பள்ளி | வலயம் |
|---|---|---|---|
| தரம் - 6 | செல்வகுமார் ஜோதிகா | யா/மருதங்கேணி இ.த.க.பா. | வடமராட்சி கிழக்கு |
| தரம் - 6 | பாலேஸ்வரன் ஆரணன் | மு/கலைமகள் வித்தி | முல்லைத்தீவு |
| தரம் - 6 | கனகசபாபதி கோபிகா | மு/கலைமகள் வித்தி | முல்லைத்தீவு |
| | | | |
| தரம் - 7 | செல்வராசா சயந்தினி | கிளி/இராமநாதபுரம் கிழ. அ.த.க. | கிளிநொச்சி |
| தரம் - 7 | நித்தியானந்தராசா ருஜிகா | மு/கலைமகள் வித்தி | முல்லைத்தீவு |
| தரம் - 7 | செல்வகுமார் தினேஸ்குமார் | யா/மருதங்கேணி இ.த.க.பா. | வடமராட்சி கிழக்கு |
| | | | |
| தரம் - 8 | உதயசூரியன் அனுராஜ் | கிளி/பூநகரி நல்லூர் ம.வி. | கிளிநொச்சி |
| தரம் - 8 | தவேந்திரன் குலலோஜினி | மு/யோகபுரம் ம.வி. | துணுக்காய் |
| தரம் - 8 | தம்பையா டிலானி | மு/தண்ணீரூற்று இ.வி. | முல்லைத்தீவு |

### கடல் நீர் உயிர்வளத் தொழில்நுட்பப் பாடம் - 2003 க.பொ.த.சா.தரம் மிகுதிறன் 'A' தேர்ச்சி பெற்றோர்

தீவக வலயம்
*யா/நயினாதீவு ஸ்ரீ கணேசா மகாவித்தியாலயம்*
01) செல்வன் அம்பிகைபாகன் சிறீராகவன்
02) செல்வன் கதிராமன் சுரேஸ்குமார்.
*யா/சேர்.வைத்திலிங்கம் துரைச்சாமி மத்தியமகாவித்தியாலயம்வேலணை*
03) செல்வன் ராஜரட்ணம் சயந்தன்
வடமராட்சி வலயம்
*யா/ஆழியவளை சி.சி.த.க.*
04) செல்வன் சந்திரசேகரம் சசிகரன்
*யா/உடுத்துறை மகாவித்தியாலயம்*
05) செல்வி உதயகுமார் தர்சினி
*யா/சிதம்பராக் கல்லூரி*
06) செல்வன் இராசலிங்கம் சுரேன்
*யா/பொலிகண்டி இந்து வித்தியாலயம்*
07) செல்வி கோவிந்தராஜா மீரா

### உண்ணாட்டு நீர் வாழ் உயிர்வள தொழில்நுட்பப் பாடம் -2003 க.பொ.த.சா.தரம் மிகுதிறன் 'A' தேர்ச்சி பெற்றோர்

முல்லைத்தீவு வலயம்
*மு/வித்தியானந்தாக் கல்லூரி*
08) செல்வன் செல்வராஜா அஜந்தன்

## வலய மட்ட முடிவுகள்

### கிளிநொச்சி

| தரம் | பெயர் | பள்ளி |
|---|---|---|
| தரம் - 06 | இராசேந்திரம் கம்சாளினி | கிளி. புனித திரேசா. பெண்கள் |
| | நகுலேஸ்வரன் நிதுஷன் | கிளி.கிளிநொச்சி ம.வி. |
| | மகேஸ்வரன் ரஜிதா | கிளி. கிளிநொச்சி ம.வி. |
| | அமிர்தலிங்கம் ஆருந்திரன் | கிளி. கிளிநொச்சி ம.வி. |
| | | |
| தரம் - 07 | முருகேசபிள்ளை விஜிதா | கிளி. கண்டாவளை ம.வி. |
| | இராசையா மகிந்தினி | கிளி. தருமபுரம் ம.வி. |
| | சிவானந்தம் ரஞ்சீவ் | கிளி. கிளிநொச்சி ம.வி. |
| | | |
| தரம் - 08 | உதயராசா றஞ்சிதா | கிளி.கிராஞ்சி அரசினர் த.க.பாட |
| | மனோகரன் திருநயனி | கிளி. புனித திரேசா பெண்கள் |
| | லோகநாதன் நேருஜா | கிளி.புனித திரேசா பெண்கள். |

### முல்லைத்தீவு

| தரம் | பெயர் | பள்ளி |
|---|---|---|
| தரம் - 06 | சிவபாதம் ஆர்த்திகா | மு. தண்ணீரூற்று இ.த.க. |
| | செல்லத்தம்பி யதுர்சி | முள்ளியவளை அ.த.க. |
| | தனகோடி இரத்தினசிங்கம் துஜிதா | மு.கலைமகள் வித்தி. |
| | | |
| தரம் - 07 | சண்முகம் பவித்ரா | மு.அம்பலவன் பொக்கணை |
| | அன்ரன் ஜீவராசா மோகன்ராஜ் | மு.முல்லைத்தீவு ம.வி. |
| | மகேஸ்வரன் கரிகரன் | மு.உடையார்கட்டு ம.வி. |
| | | |
| தரம் - 08 | சண்முகவடிவேல் சிவோமியா | மு.தண்ணீரூற்று இ.வி. |
| | சுந்தரமூர்த்தி சுஜானி | மு.தண்ணீரூற்று இ.வி. |
| | துரைராசா மேரி அனுசியா | முல்லைத்தீவு ம.வி. |

### துணுக்காய்

| தரம் | பெயர் | பள்ளி |
|---|---|---|
| தரம் - 06 | விநாயகமூர்த்தி அகிலன் | மு.தண்டுவான் அ.த.க. |
| | தங்கராசா விதுசன் | மு.தண்டுவான் அ.த.க. |
| | இராசரத்தினம் கௌதமி | மு.விநாயகபுரம் அ.த.க. |
| | | |
| தரம் - 07 | இலக்குப் புள்ளியை எவரும் அடையவில்லை | |
| தரம் - 08 | கனகலிங்கம் கார்த்திகா | மு.விநாயகபுரம் அ.த.க. |
| | சோதிநாதன் ஜயரஞ்சினி | மு.முத்துஐயன்கட்டு |
| | இரவீந்திரன் கனிஸ்ரன் | மு.ஒட்டுசுட்டான் ம.வி. |

### வவுனியா வடக்கு

| தரம் | பெயர் | பள்ளி |
|---|---|---|
| தரம் - 06 | பஞ்சவர்ணம் றஜீபா | வ. ஓமந்தை மத்திய கல். |
| | மகேந்திரன் நரேந்திரன் | வ.ஒலுமடு அ.த.க.பா. |
| | குலநாதன் சுபாஜினி | வ.ஓமந்தை மத்திய கல். |
| | | |
| தரம் - 07 | இலக்குப் புள்ளியை எவரும் அடையவில்லை | |
| தரம் - 08 | சிவலிங்கம் பாசுகி | வ.விக்கினேஸ்வரா ம.வி. |
| | ச. தவரூபினி | வ.ஓமந்தை மத்திய கல். |
| | பவளசிங்கம் சுதர்சினி | வ.சின்னடம்பன் பாரதி வி. |

### மடு

| தரம் | பெயர் | பள்ளி |
|---|---|---|
| தரம் - 06 | கனகரத்தினம் நிரோஜா | மன்.வெள்ளாங்குளம் அ.த.க. |
| | கணேசபாலேந்திரன் கலையழகன் | மன்.இலுப்பைக்கடவை அ.த. |
| | கார்த்திகேசு குமரேசு | மன்.வெள்ளாங்குளம் அ.த.க. |
| | | |
| தரம் - 07 | சூசைநாதன் வேல்டிசொய்சா | மன்.பெரியபண்டிவிரிச்சான் |
| | இலக்குப் புள்ளியை ஏனையோர் அடையவில்லை | |
| தரம் - 08 | சுதாசிவம் சிந்துஜா | மன்.பெரியபண்டிவிரிச்சான் |
| | திருயோகநாதன் கனுஜா | மன்.பெரியபண்டிவிரிச்சான் |
| | இராசநாயகம் மரினாதுஷாந்தினி | மன்.பெரிய பண்டிவிரிச்சான் |

### வடமராட்சி கிழக்கு

| தரம் | பெயர் | பள்ளி |
|---|---|---|
| தரம் - 06 | உதயச்சந்திரன் உதயதீபா | யா.மருதங்கேணி இ.த.க.பா. |
| | பாலசுந்தரம் கனுசியா | யா.மருதங்கேணி இ.த.க.பா. |
| | கிற்பஸ்லிபில்பிறேட் கவிப்பிரியா | யா.வெற்றிலைக்கேணி பா. |
| | | |
| தரம் - 07 | இலக்குப் புள்ளியை எவரும் அடையவில்லை | |
| தரம் - 08 | ஜெயராசா குகேந்திரன் | யா. உடுத்துறை ம.வி. |
| | இராசேந்திரம் பகீரதன் | யா. உடுத்துறை ம.வி. |
| | முத்துராசா அனுசியா | யா. உடுத்துறை ம.வி. |

## முல்லை. மாவட்ட சுகாதார தொண்டர்களுக்கான நேர்முகத் தேர்வில் பங்கேற்றோர் ஆதங்கம்

(முல்லை)

முல்லை. மாவட்டத்திலுள்ள சுகாதாரத் தொண்டர்களுக்கான நேர்முகத்தேர்வு கடந்த 22,23, ஆம் திகதி பிரதிமாகாண சுகாதார சேவைப்பணிப்பாளர் பணிமனையில் நடைபெற்றது.

இவ் நேர்முகத்தேர்வு பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலக நிர்வாக அலுவலர் தலைமையில் இடம்பெற்றது முதல் நாள் அவர்களுக்கான நேர்காணலும், அடுத்தநாள் பணிகள் செய்யவிடப்பட்டு பார்வையிடப்பட்டது.

நேர்முகத் தேர்வுக்கு தோற்றிய தொண்டர்கள் அனைவரும். எத்தனை பேரை எடுப்பார்களோ? நாம் அனைவரும் உள்வாங்கப்படுவோமா? என்ற கவலையுடன் இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி நேர்முகத் தேர்வில் 216 சுகாதாரத் தொண்டர்கள் பங்கேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (20)

## தமிழீழ விளையாட்டுத்துறை ஆதரவுடன் மாபெரும் மாட்டுவண்டி சவாரிப்போட்டி

தமிழீழ விளையாட்டுத் துறையினரின் ஆதரவுடன் வட்டக்கச்சி இராமநாதபுரம் விவசாய மக்களால் எதிர்வரும் 2004.08.01ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப 1.மணிக்கு வட்டக்கச்சி கலைவாணி சவாரித்திடலில் அ.ஆ.இ.ஈ.என நான்கு பிரிவுகளாக சவாரிப்போட்டியை நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக விளையாட்டுத்துறையினர் அறியத்தருகின்றனர்.

– மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தின் மூலம் மோசடி –

# முதல்வர் ஜெயலலிதாவின் குற்றச்சாட்டை நிராகரிக்கிறார் தேர்தல் ஆணையாளர்

(சென்னை)

**இந்தியாவில் நடந்து முடிந்த மக்களவைத் தேர்தலின் போது தமிழகத்தில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தின் மூலம் மோசடி செய்யப்பட்டதாக தமிழக முதல்வரும்,அ.தி.மு.கழக பொதுச் செயலாளரு மான ஜெயலலிதா தெரிவித்த குற்றச்சாட்டினை இந்திய தேர்தல் ஆணையகத்தின் துணை ஆணையாளர் ஏ.என். ஜா மறுத்துள்ளார்.**

சென்ற மே மாதம் நடைபெற்ற தமிழக மக்களவைத் தேர்தலில் பயன்படுத்தப்பட்ட அனைத்து வாக்குப்பதிவு மின்னணு இயந் திரங்களும் அப்பழுக்கற்றவை என்று தெரிவித்துள்ள ஆணையா ளர் தமிழக முதலமைச்சர் ஜெய லலிதா தேர்தலில் வாக்குப்பதிவின் போது மின்னணு இயந்திரங்கள் தி.மு.க.கூட்டணிக்கு சார்பாக மாற்றியமைக்கப்பட்டு பயன் படுத்தியதில் மோசடி செய்யப்பட்ட தாக குற்றம் சாட்டியிருந்தமையை ஏற்றுக் கொள்ளமுடியாது என்று கேள்வி ஒன்றிற்குப் பதிலளிக்கை யில் கூறியுள்ளார்.

2001 ஆம் ஆண்டும் தமிழக சட்டப்பேரவை தேர்தலில் மின் னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டதையும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களின் நம்பகத் தன்மை யினை பல உயர் நீதி மன்றங்கள் உறுதி செய்துள்ளன என்றும் இது குறித்த சந்தேகம் ஆதரமற்றது என்றும் அவர் கூறியுள்ளார்.

# இந்திய–சீன அதிகாரிகள் எல்லைப் பிரச்சினை குறித்து ஆராய்வு

(புதுடில்லி)

இந்தியா-சீனா உறவு மற்றும் எல்லைப் பிரச்சினைகள் குறித்து இருநாட்டுப் பிரதிநிதிகளும் இன்று புதுடில்லியில் மூன்றாவது சுற்றுப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

இரண்டு நாட்கள் நடைபெற வுள்ள இந்தப் பேச்சுவார்த்தை களில் இந்தியத் தரப்பில் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் டிஎன் டிக்சிற் தலைமையில் உயர்மட்டக் குழு பங்கேற்கின்றது.

சீனாவின் தரப்பில் அந்நாட்டு துணை வெளியுறவு அமைச்சர் டாய்வின்டாபு தலைமையிலான குழு பேச்சுவார்த்தைகளில் பங்கு கொள்ளவுள்ளது.

# சேது சமுத்திரத்திட்டத்திற்கு 4000 கோடிரூபா செலவாகும்

*–அமைச்சர் டி. ஆர். பாலு*

(புதுடில்லி)

சேது சமுத்திரம் கால்வாய் திட்டத்தை அடுத்த மூன்று ஆண்டுகளில் செயற்படுத்துவதற்காக 4000 கோடி ரூபாய் செலவிடப்படும் என்று மத்திய கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் டி.ஆர்.பாலு கூறியுள்ளார்.

சென்னையில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இந்தத்திட்டதிற்கு வெளிநாட்டு முதலீடு தேவையில்லை என்றும், அரசின் பங்கு குறித்தும் மத்தியமைச்சரவை தீர்மானம் மேற்கொள்ளும் என்றும், ‘ இந்தத் திட்டம்’ தொழில்நுட்ப ரீதியில் சாத்தியம் தானா எனும் ஆய் வறிக்கை இன்னும் ஒரு வாரத்தில் கிடைத்துவிடும் என்றும் கூறியுள்ளார்.

# மத்திய அமைச்சர் சிபுசோரனின் இராஜினாமா சனாதிபதியால் ஏற்பு

(புதுடில்லி)

மத்திய நிலக்கரி மற்றும் சுரங்கத்தொழில் அமைச்சர் சிபுசோரனின் இராஜினாமாவை இந்திய சனாதிபதி அப்துல்கலாம் ஏற்றுக் கொண்டுள்ளார்.

பிரதமர் மன்மோகன்சிங்கின் பரிந்துரையை அடுத்து சிபுசோரனின் இராஜினாமா ஏற்கப்பட்டுள்ளதாக குடியரசுத் தலைவர் மாளிகைச் செய்திக்குறிப்பு கூறியுள்ளது.

ஜார்க்கண்ட் மாநிலத்தில் படுகொலை வழக்கில் நீதிமன்றத்தால் கைது ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ள சிபுசோரனை உடனடியாக கைது செய்வதற்கு காவல்துறைக்கு மத்தியரசு உதவி செய்ய வேண்டுமென்று தேசிய சனநாயகக் கூட்டணி கேட்டுக்கொண்டுள்ளது.

# 5 மத்திய அமைச்சர்களை பதவி நீக்குக இந்திய எதிர்க்கட்சிகள் கோரிக்கை

(புதுடில்லி)

குற்றப் பின்னணி கொண்ட லல்லுப்பிரசாத் யாதேவ் உள்ளிட்ட ஐந்து மத்தியமைச்சர்களையும் பதவி நீக்க வேண்டும் என்று இந்திய சனாதிபதி அப்துல்கலா மிடம் அத்வானி தலைமையினை எதிர்க்கட்சிக் குழுவினர் நேற்று நேரில் வலியுறுத்திக் கூறியுள்ளனர்.

இதேவேளை குற்ற வழக்கு களில் தொடர்புடைய மத்தியமைச் சர்களுக்கு எதிரான போராட்டத்தை தீவிரப்படுத்தவும் சிபுசோரனைக் கைது செய்ய மத்தியரசு உதவ வேண்டுமென்று சனாதிபதி அப்துல்கலாமிடம் கோரிக்கையிடு வது என்றும் எதிர்கட்சியான தேசிய சனநாயகக் கூட்டணி நேற்று முன்தினம் முடிவு செய்திருந்தது.

நேற்று முன்தினம் புது டில்லியில் கூட்டணி ஒருங்கிணைப் பாளர் ஜார்ச் பெர்னாண்டஸ் இல்லத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டள்ளது. என்று பாரதிய ஜனதா தலைவர் களில் ஒருவரான சுஷ்மாசிவராஜ் செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

# தமிழக அரசின் எதிர்ப்பையும் மீறி மதுரையில் உயர்நீதிமன்றக் கிளை திறப்பு

(சென்னை)

சென்னை உயர்நீதிமன்றத்தின் கிளை நேற்று மதுரையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. தமிழக தென்மாவட்ட மக்களின் 35 வருட கனவு நிறைவேறியுள்ளதாகக் கூறப்படுகின்றது. மதுரையில் உயர்நீதி மன்றக் கிளை அவசியமற்றது என்று தமிழக அரசு மனுத்தாக்கல் செய்திருந் தமையும் மத்தியரசு அவசியம் என்றும் அதற்குத் தமிழக அரசு தடை விதிக்க கூடாது என்றும் பதில் மனுத்தாக்கல் செய்தமையும் குறிப்பிடத்தக்கது.

# அசாம், அருணாச்சலம், பீகாரில் வெள்ள நிலமை மோசம்; 300 பேர் பலி

(புதுடில்லி)

அசாம், அருணாச்சலம் பிர தேசம், பீகார் மாநிலங்களில் வெள்ள நிலமை மோசமடைந்து வருகின்றது. இந்த மாநிலங்களில் இதுவரை 300இற்கும் அதிகமான வர்கள் பலியாகியுள்ளனர். இலட் சக் கணக்கானோர் வெள்ளத் தினால் இடம்பெயர்ந்துள்ளனர்.

அசாம் மாநிலத்தில் புகழ்பெற்ற காவிரங்க தேசிய சரணாலயத் திலும், வெள்ளம் புகுந்துள்ளதால், ஆயிரக்கணக்கான வன விலங் குகள் உயிரிழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

அசாம், திரிபுரா, அருணாச்சலப் பிரதேசத்தில் வீதிகள், புகையிரதப் பாதைகள் என்பன வெள்ளத்தில் அடித்து அள்ளுப்பட்டுச் சென் றுள்ளதால் இந்த மாநிலங்கள் நாட்டின் பிறபகுதிகளிலிருந்து துண்டிக்கப்பட்டுள்ளது.

அசாம், திரிபுரா, அருணாச்சலப் பிரதேசம் உள்ளிட்ட வடகிழக்கு மாநிலங்களிலும், பீகாரிலும் பிரம்ம புத்த மற்றும் அதன் கிளை நதிக ளிலும் எந்த ஆண்டும் இல்லாமல் இம்முறை வெள்ளப் பெருக்கு ஏற்பட்டிருக்கின்றது.

# வாக்காளர் பட்டியலில் பெயர்கள் நீக்கம் தி.மு.க.மீது அ.தி.மு.க குற்றச்சாட்டு

(சென்னை)

மக்களவைத் தேர்தலின் போது வாக்காளர் பட்டியலிலிருந்து 43 இலட்சம் அ.தி.மு.க. வாக்காளர்களை தி.மு.க. சதி செய்து நீக்கிவிட்டதாக தமிழக சட்டப்பேரவை நிதியமைச்சர் பொன்னய் யன் கூறியுள்ள குற்றச்சாட்டை தி.மு.க. தலைவர் கருணாநிதி மறுத்துள்ளார்.

சென்னையில் நேற்று முன்தினம் இது தொடர்பாக அறிக்கை ஒன்றினை வெளியிட்ட தி.மு.க. தலைவர், அ.தி.மு.க. ஆளும் கட்சியாக இருக்கும் போது இவ்வளவு அதிகமான தொகை எவ்வாறு நீக்கப்பட முடியும் என்று கூறியுள்ளார்.


## வரலாறு காணாத மலிவு விற்பனை

**கொழும்பு ஜெயா புக் சென்ரரின்** அனுசரணையுடன் யாழ்.பல்கலைக்கழக வணிக மாணவர் மன்றத்தினால் பல்கலைக்கழகத்தில் இரண்டாவது தடவையாக வரலாறு காணாத மலிவு விற்பனை நடைபெறவுள்ளது.

| | |
|---|---|
| காலம் :- | 2004 ஜூலை 19 முதல் 29 வரை |
| நேரம்:- | தினமும் காலை 9.00 மணிமுதல் 6.00 மணிவரை (புதிய நேரம்) |
| இடம்:- | யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறை விரிவுரை மண்டபம். |

❋சகலருக்கும் இலங்கை நூல்களிற்கு 10% கழிவு வழங்கப்படும்.
❋பிறநாட்டு வெளியீடுகளுக்கு 15% கழிவு வழங்கப்படும்.
❋மொத்தமாகக் கொள்வனவு செய்யும் அனைவருக்கும் இலங்கை வெளியீடுகள் தவிர பிறநாட்டு வெளியீடுகள் (ஒவ்வொன்றிலும் ஆகக்குறைந்தது 10 பிரதிகள்) கொள்வனவு செய்வோருக்கு விசேட கழிவாக 20% வழங்கப்படும்.

பாடசாலைகள், பல்கலைக்கழகம், தொழில்நுட்பக் கல்லூரிகள், கல்வியியற் கல்லூரி, பொது நிறுவனங்கள், பிரதேசசபை, நூலகங்கள், தனியார் கல்வி நிறுவனங்கள் ஆகிய நிறுவனங்களிற்குக் கடன் அடிப்படையில் புத்தகங்கள் கொள்வனவு செய்வதற்குரிய ஒழுங்குகள் செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு:-
வணிக மாணவர் மன்றம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

(சி-10116)



## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 26 * 06 * 1975



உதிர்வு 03 * 08 * 2002

**ஆரோக்கியநாதர் வின்சன்சேர்சில்**
(அருமை)

அன்புத் தெய்வமே!
கண்ணோரம் நீர் கசிந்து முடியவில்லை
ஆண்டிரண்டு ஆனதையா
மாறாத நினைவுதனை மனதிலே
வரைந்து கொண்டு
தவறாமல் உமையே தினம் தினம்
எண்ணுகிறோம் ஐயா!
ஆறுதலுக்கு ஆயிரம் உறவுண்டு
ஆனால் "அருமை" என்று அழைக்க
யாருமில்லையே?

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

தகவல்:-
அம்மா, அண்ணா,
அக்காமார்,தங்கை,
அண்ணி,அத்தான்மார்,
மருமக்கள்,பெறாமக்கள்
மற்றும் உற்றார் உறவினர்
நண்பர்கள்.

இடம்:-
பொலிகண்டி

(4848)

## வெற்றியால் வேதனையடைந்த கொஸ்டாரிக்கா காலப்ந்து வீரர்கள்

தோற்றால் தான் ஒரு அணிக்கு பல்வேறு ரூபங்களில் பிரச்சினை உருவாவதைக் கேள்விப்பட்டிருப் போம். ஆனால் கோபா அமெரிக்க கால்பந்துப் போட்டியில் வெற்றி பெற்ற கொஸ்டாரிக்கா அணிக்கு வேறு விதத்தில் பிரச்சினை உரு வானது.

கடந்த வாரம் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் சிலி நாட்டு அணியை 2-1 என்ற கோல் கணக்கில் தோற்கடித்ததன் மூலம் காலிறுதி வாய்ப்பைப் பெற்றது கொஸ் டாரிக்கா.

ஆனால் அந்த நாட்டு உதைபந் தாட்ட சம்மேளனம் வீரர்களின் தரத்தைக் குறைத்து மதிப்பிட்டதோ. இல்லை வழக்கம் போல் முதல் சுற்றிலேயே வெளியேறிவிடுமென நினைத்ததோ தெரியவில்லை.

முதல் சுற்றிலேயே வீரர்கள் திரும்புவதற்கான விமானம் முன் பதிவு செய்துவிட்டனர். ஆனால் அணியோ காலிறுதிச் சுற்றை எட்டியதால் மேலும் ஒரு ஆட்டம் விளையாட வேண்டியதாயிற்று.

காலிறுதியில் கொலம் பியாவிடம் தோல்வியடைந்தது. கொஸ்டாரிக்கா. இந்த நிலையில் பெருவில் இருந்து வெளியேற முடியாது அவ் அணிவீரர்கள் பல மணி நேரம் தவித்தனர். காரணம் விமானத்தில் இடம்கிடைக்க வில்லை.

இதனால் ஆட்டம் முடிவுற்றும் இரண்டு தினங்கள் வீரர்கள் விமான நிலையத்தில் காத்துக் கிடக்க வேண்டியநிலை.

இதனால் அதிர்ச்சியடைந்துள்ள வீரர்கள் அந்நாட்டு உதைபந்தாட்ட சம்மேளனத்தைக் குற்றம் சாட்டியுள்ளனர்.

## லோட்சில் நடைபெற்று வரும் டெஸ்ட் போட்டி வெற்றி தோல்வியற்ற முடிவைத் தருமா?

இங்கிலாந்து மேற்கிந்தியத் தீவுகளுக்கிடையில் லோட்ஸ் மைதானத்தில் நடைபெற்று வரும் முதலாவது டெஸ்ட்கிரிக்கெட் போட்டியின் நான்காம் நாளான நேற்று தனது இரண்டாவது இனி ங்சை ஆடிவரும் இங்கிலாந்து அணி மதியபோசன இடைவேளை யின்போது மேற்கிந்தியத் தீவைவிட 376 ஓட்டங்கள் முன்னிலையில் இருந்து இங்கிலாந்து அணி முதல் இனிங்சில் 568 ஓட்டங்களைப் பெற்றது. மேற்கிந்தியத் தீவு 416 ஓட்டங்களைப் பெற்றது.

இங்கிலாந்து அணி தனது இரண்டாவது இனிங்சில் மதிய போசன இடைவேளையின் போது 4 விக்கெட்டுக்களை இழந்து 247 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

அன்ரூ பிளிண்டொப் ஆட்ட மிழக்காது 45 ஓட்டங்களையும் அவருடன் இணைந்து அணித் தலைவர் மைக்கல் வோன் ஆட்டமிழக்காது 84 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

இங்கிலாந்து அணி சார்பாக முதல் இனிங்சில் ரொபட்கி 221 ஓட்டங்களையும் அன்ரூஸ் ரோஸ் 137 ஓட்டங்களையும், அணித் தலைவர் வோன்103ஓட்டங் களை யும், மேற்கிந்தியத்தீவுகள் சார்பாக சந்தர்ப்போல் ஆட்டமிழக்காது 121 ஓட்டங்களையும் ஹெய்ல் 66 ஓட் டங்களையும் பெற்றுகொண் டமை குறிப்பிடத்தக்கது.




## கோபா அமெரிக்க கால்பந்து சம்பியன் போட்டி இறுதிப்போட்டி இன்று, உருகுவேக்கு மூன்றாமிடம்



'கோபா' அமெரிக்கா என அழைக்கப்படும் அமெரிக்க கண்டத் துக்கிடையிலான கால்பந்து சம்பியன் கிண்ணத்துக்கான இறுதிப் போட்டியில் உலகசம்பியன் பிரேசில் அணி ஆர்ஜன்டீனா அணியை எதிர்கொள்கின்றது.

இந்த இரண்டு அணிகளும் கால்பந்தாட்டத்தைப் பொறுத்தவரை பரமவைரிகள் எனக் கருதப்படும் இரண்டு அணிகள்.

இவ் இரண்டு அணிகளும் இறுதிப் போட்டியில் சந்திப்பதால் இந்தப் போட்டிக்கு விறுவிறுப்பையும் பொலிவையும் வழங்கியி ருப்பதாகத்தெரிவிக்கப்படுகிறது.


இதேவேளை இப்போட்டித் தொடரில் மூன்றாம் இடத்தை தீர்மானிக்கும் போட்டியில் எதிர்பாராத வகையில் உருகுவே அணிபலமான கொலம்பிய அணியை வெற்றிகொண்டு மூன்றாம் இடத்தைத் தக்கவைத்துள்ளது.

இறுதிப்போட்டியில் ஆர்ஜன்டீனாவை பிரேசில் வெற்றி கொள்ளும் என்பதை அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்துள்ளனர். இரண்டு அணிகளுக்கும் சமமான வாய்ப்பு இருக்கின்றது. ஆனாலும் ஆர்ஜன்டீனா அனுபவத்தில் உயர்ந்த அணியாகவும் பிரேசில் அணி 21 வயதுக்குட்பட்ட வீரர்களை அதிகளவில் கொண்டதாகவுமுள்ளதுடன் பிரதான வீரர்களுக்கு ஓய்வுகொடுத்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## பரிசுத்தொகை நிலுவை வழங்கப்படவில்லை தகுதிகாண் போட்டியில் பங்கேற்க கென்யா மறுப்பு

ஒருவருடமாகியும் கடந்த வருடம் நடைபெற்ற உலகக் கிண்ணக் கிரிக்கெட்டில் பங்கேற்ற போட்டிகளுக்குரிய பரிசுத் தொகை நிலுவை இதுவரை வழங்க வில்லையென கென்ய கிரிக் கெட்சபை அதிகாரிகள் சர்வதேச கிரிக்கெட்சபையைக் குற்றம் சுமத்தியுள்ளனர். இதன் காரண மாக தற்போது செப்ரெம்பரில் நடைபெறவுள்ள I.C.C மினி உலகக்கிண்ணப் போட்டிகளுக் கான உகண்டாவுடனான தகுதி காண் போட்டிகளிலும் பயிற்சிப் போட்டிகளிலும் பங்கேற்க கென்ய வீரர்கள் மறுத்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆயினும் சபையின் முகாமையாளர் சமி. உபிங்கோ தெரிவிக்கும்போது; சர் வதேச கிரிக் கெட்சபையிடமிருந்து பெற்ற அனைத்து நிலுவைகளும் வழங்கப்பட்டுள்ளதாகவும் தென்னா பிரிக்க வருமானவரிபணிப்பா ளர்களின் சிபார்சுகளால் இது தாமதித்துள்ளதாகவும் தெரிவித் துள்ளார். அதேவேளை தென்னா பிரிக்க வருமானவரி திணைக்களம் இவர்களின் வரியை அறவிடுவதா அல்லது ஒத்திப்போடுவதா என் பது பற்றி இறுதி முடிவு எடுக்க வில்லையென்று கென்ய அதிகா ரிகள் வீரர்களிடம் தெரிவித் துள்ளனர்.

## ஆசியக்கிண்ண காலப்ந்துப் போட்டி; அணிகள் கால் இறுதிக்கு முன்னேற்றம்



சீனாவில் நடைபெற்று வரும் ஆசிய கோப்பை கால்பந்து போட்டியில் நேற்று நடைபெற்ற போட்டியில் தாய்லாந்து அணி ஜப்பான் அணியிடம் 1-4 என்ற கோல் எண்ணிக்கையில் படு தோல்வி அடைந்தது.

இதன் அடிப்படையில் ஜப்பான் கால் இறுதிக்கு முன்னேறி யுள்ளது.

இரண்டு போட்டிகளில் வெற்றி பெற்று ஜப்பான் ஆறு புள்ளிக ளைப் பெற்றுள்ளது. ஈரான் இரண்டு போட்டிகளில் 4 புள்ளி களையும், ஓமான் ஒரு புள்ளி யையும் பெற்றன. தாய்லாந்து, எந்தவிதமான புள்ளியையும் பெறாமல் இருக்கின்றது.

மற்றுமொரு போட்டியில் சீனா கட்டார் அணியை 1-0 என்ற கோல் எண்ணிக்கையில் தோற்கடித்தது. பஹ்ரேன் 3-1 என்ற கோல் எண் ணிக்கையில் இந்தோனே சியாவைத் தோற்கடித்துள்ளது.

இதனடிப்படையில் சீனா மூன்று போட்டிகளில் 7 புள்ளி களை பெற்று காலிறுதிக்குத் தெரி வாகியுள்ளது. பஹ்ரேன் மூன்று



போட்டிகளில் 5 புள்ளிகளையும், இந்தோனேசியா மூன்று போட்டி களில் 3 புள்ளிகளையும், கட்டார் மூன்று போட்டிகளில் ஒரு புள்ளி யையும் பெற்றுள்ளன.

## உலக மகளிர் டென்னிஸ்போட்டி காலிறுதியில் வில்லியம்ஸ் சகோதரிகள்



லொஸ் ஏஞ்சல்ஸில் நடை பெற்று வரும் உலக மகளிர் டென்னிஸ் போட்டியில் அமெரிக்காவின் வில்லியம்ஸ் சகோதரிகள் காலிறுதிச் சுற்றில் விளையாடத் தகுதி பெற்றுள்ளனர். வியாழக் கிழமை நடைபெற்ற காலிறுதித் தகுதி ஆட்டத்தில் ஸ்பெ யினைச் சேர்ந்த அராண்ட்சா பாரா சான் டோன்ஜாவுடன் விளையாடினார். செரீனா வில்லியம்ஸ் 53 நிமிடம் நீடித்த இந்த ஆட்டத்தில் செரீனா 6-3, 6-0 என்ற நேர் செட்களில் வெற்றி பெற்றார். மாலை நடைபெற்ற ஆட்டத்தில் அவரது அக்கா வீனஸும் எளிதாகவே வெற்றி பெற்றார். தரவரிசையில் இரண்டாம் நிலையில் உள்ள வீனஸ் 6-1,6-1 என்ற நேர் செட்களில் ரஷ்ய வீராங்கனை எலீனா லிகோத்சேவாவை வெளியேற்றினார். ஆனால் தங்கையைக் காட்டிலும் 5 நிமிடம் குறைவாகவே வெற்றிக்காக வீனஸ் எடுத்துக்கொண்டார். மற்றொரு ஆட்டத்தில், மூன்று முறை சம்பியன் அமெரிக்காவின் லின்ட்சே டேவன்போர்ட் 6-2,6-4 என்ற கணக்கில் ஸ்பெயின் வீராங்கனை அமி பிரேஸியரின் முயற்சிக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

இரண்டாவது செட்டில் 3-3 என சமநிலை வகித்தும், அதன் பின்னரான ஆட்டத்தில் சமாளிக்க முடியாமல் தோல்வியுற்றார் பிரேஸியர். டேவன்போர்ட் 10 முறை 'ஏஸ்' சர்வீஸ்களைப் போட்டு பிரேஸியரைத் திணறடித்தார்.



இன்சமாம் உல்ஹக்

## இந்தியாவின் ஆனந்த் முன்னிலையில்

டாட்மண்ட எனும் இடத்தில் நடைபெறும் செஸ் போட்டித் தொடரில் கடந்த வெள்ளியன்று நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த் ரஷ்ய வீரர் பீட்டர் ஹிட்லரை 53ஆவது நகர்வில் தோற்கடித்தார். 8 வீரர்கள் பங்கேற்கும் இந்தப் போட்டித் தொடரில் இரண்டாவது சுற்று ஆட்டத்தில் பெற்ற இந்த வெற்றியின் மூலம் ஆனந்த் 1.5 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார்.

இதற்கிடையில் சுவிற்சர்லாந்தில் நடைபெறும் மற்றொரு சர்வதேச கிராண்ட் மாஸ்ரர் செஸ் போட்டித் தொடரில் இந்தியாவின் சசீந்திரன் 5ஆவது சுற்றுப் போட்டியில் பிரெஞ்சு வீரர் லிட்டினே பார்க்காத்துடன் சமன் செய்தார். 3 புள்ளிகளுடன் அவர் இப் போட்டித் தொடரில் 3ஆவது இடத்தில் உள்ளார்.

### ஆசியக்கிண்ண கிரிக்கெட் போட்டி-2004

## பாகிஸ்தான் அணி 59 ஓட்டங்களால் வெற்றி!

ஆசியக்கிண்ண கிரிக்கெட் போட்டியில் நேற்று நடைபெற்ற முக்கியமான சுப்பர்லீக் போட்டி ஒன்றில் பாகிஸ்தான் அணி இந்திய அணியை 59 ஓட்டங்களால் தோற்கடித்தது.

இவ் வெற்றி மூலம் இச் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டியில் கலந்துகொள்வதற்கான வாய்ப்பை பாகிஸ்தான் பிரகாசமாக்கியுள்ளது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணித்தலைவர் இன்சமாம் உல்.ஹக் முதலில் துடுப்பெடுத்தாட இணக்கம் தெரிவித்தார்.

இதன்மூலம் பாகிஸ்தான் 9விக்கெட்டுக்களை இழந்து மிகப்பெரிய ஓட்ட எண்ணிக்கையான 300ஐ எட்டியது. ஒரு கட்டத்தில் 300இற்கும் அதிகமான ஓட்டங்களை பெறும் என கருதப்பட்ட பாகிஸ்தான் டெண்டுல்கர், பதான் ஆகியோரின் சிறப்பான பந்துவீச்சின் மூலம் அதனை அடைய முடியாது போனது.

பாகிஸ்தானின் ஓட்ட எண்ணிக்கைக்கு சொஹைப்மலிக் 143 ஓட்டங்களைப்பெற்று வலுவூட்டினார்.அதனை விட ஹமீட் 31, இன்சமாம் உல்ஹக் 34, யூகானா 29, அப்துல் ரசாக் 22 ஆகியோர் மலிக்குடன் இணைந்து மிகப்பெரிய ஓட்ட எண்ணிக் கைக்கு வலுச்சேர்த்தனர். பந்து வீச்சில் பதான், டெண் டுல்கர் ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். பதிலுக்கு 301 என்ற வெற்றி இலக்கை நோக்கி ஆட்டத்தை ஆரம்பித்த இந்தியா நிர்ணயிக்கப் பட்ட ஓவரில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 241 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. துடுப்பாட்டத்தில் டெண்டுல்கர் 77 ஓட்டங்களையும், பதான், கங்குலி ஆகியோர் 38, 39 ஓட்டங்களையும் முறையே பெற்றனர்.



மான்செஸ்டர் யுனைற்றெட்டின் அனுபவமிக்க அணித்தலைவரான றோய் கீன் அண்மைய காயங்களினால் வெறுப்புற்ற நிலையிலும் இங்கிலிஸ் பிரிமியர்ஷிப்பில் ஒரு போட்டிக்கு மேல் நடுக்கள ஆட்டக்காரராக விளையாட முடியும் என நம்புகிறார்.

## சிந்தனைக்கு



உலகத்தில் எந்த ஒரு நாடும் இரத்தம் சிந்தாமலும் தியாகங்கள் புரியாமலும் சுதந்திரம் பெற்றதில்லை.

தமிழீழ தேசியத்தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை, கிளிநொச்சி. 26-07-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@eezhanatham.com

## அவர்களைக் கூறிப்பயனில்லை...!

பெற்றோல் விலை எட்டு ரூபாய்களால் அதிகரிக்கப்பட்டுள்ளது. பெற்றோல் விலை அதிகரிப்பு ஏற்படும் என எதிர்பார்த்ததே ஆயினும் எட்டு ரூபாவால் அதிகரிக்கப்படும் என எதிர்பார்த்திருக்கவில்லை. ஏனெனில், கடந்த ஆட்சிக் காலத்தில் ஒரு ரூபா, இரண்டு ரூபாவினாலேயே அதிகரித்த பெற்றோலின் விலை இம்முறை எட்டு ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஐ.ம.சு.முன்னணியினர் ஆட்சிக்கு வந்த பின்னர் மேற்கொள்ளப்பட்ட முதலாவது பெற்றோலிய விலையேற்றம் இதுவாகும். இவ்விலையேற்றமானது இடம் பெறுவதற்கான சமிக்கைகள் ஏற்கனவே வெளிப்பட்டு வந்ததே எனினும், எட்டு ரூபா அதிகரிப்பதென்பது புதிய அரசாங்கத்தின் வாக்குறுதிகளுக்கு மாறானதாகும்.

ஐ.ம.சு. முன்னணி தேர்தலுக்கு முன்னர் ஐ.தே.முன்னணி அரசாங்கத்தின் மீது சுமத்திய குற்றச்சாட்டுக்களில் முக்கியமானது கட்டுக்கடங்காவிலைவாசி ஏற்றம் என்பதாகும். இவ்விலை வாசி ஏற்றமானது மக்களின் வாழ்க்கைச் செலவை அதிகரிப்பதாகவும், மக்கள் பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் உள்ளாகியுள்ளனர் என்பதும் ஆகும்.

இதேசமயம், மக்கள் மீதான இச்சுமையைப் போக்குவதற்கென சம்பள உயர்வு வழங்கப்படும் என்பதும், பட்டதாரிகள் உட்பட இளைஞர்களுக்குப் பெருமளவில் வேலை வாய்ப்பு வழங்கப்படும் என்பதும் ஐ.ம.சு, முன்னணியின் தேர்தல் வாக்குறுதியாக இருந்தது. அதிலும் குறிப்பாக, அரசாங்க ஊழியர்களுக்கு 70 சதவீத சம்பள உயர்வு வழங்கப்படும் என்பதும், சுமார் 30,000 பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படும் என்பதும் தேர்தல் வாக்குறுதிகள் பெரிதாகப் பேசப்பட்டதாகும்.

ஆனால், இவ்வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்குக் குறுகிய கால எல்லைகளையும் அது வாக்குறுதிகளாக வழங்கியிருந்தது. அதாவது, மூன்று மாத காலத்திற்குள் இவ்வாக்குறுதிகள் நிறைவேற்றப்படும் என்பது அவர்களின் உறுதி மொழிகளாக இருந்தது.

இருப்பினும், ஐ.ம.சு. முன்னணி அரசாங்கத்தினால் தனது பொதுத் தேர்தல் வாக்குறுதிகள் எதையும் குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் நிறைவேற்றமுடியவில்லை. மாறாக, பெற்றோலிய விலையே அதிகரிக்கப்பட்டுள்ளது. பெற்றோலிய விலையேற்றம் என்பது விலை வாசி ஏற்றத்திற்கு பொதுவில் அடிப்படையான காரணி என்பது வெளிப்படையானதொன்று.

இதேவேளை, தற்போதைய பெற்றோலிய விலையேற்றமானது, எட்டு ரூபாவாக இருந்தமைக்குக் காரணம் இல்லாமல் இல்லை. பொதுத் தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் மாகாண சபைத் தேர்தலை எதிர்கொண்ட ஐ.ம.சு. முன்னணி அரசாங்கம் மாகாண சபைத் தேர்தலுக்கு முன்னதாக பெற்றோலின் விலையேற்றத்தினைக் கட்டுப்படுத்தியிருந்தனர்.அதாவது விலை உயராது பார்த்துக் கொண்டனர்.

தற்பொழுது மாகாண சபைத் தேர்தலிலும் வெற்றி பெற்ற பின்னர், வட்டியும், குட்டியுமாக என்பது போல், பெற்றோலின் விலையை எட்டு ரூபாவினால் உயர்த்தியுள்ளனர். இதற்கு சர்வதேச ரீதியில் பெற்றோலியப் பொருட்களின் விலையேற்றமே காரணம் எனவும் கூறியுள்ளது. அரசாங்கத்தின் இந்நடவடிக்கையானது மக்களை இவ் ஆட்சியாளர்கள் எத்தனை ஏமாளிகள் ஆக்கியுள்ளனர் என்பதனையே வெளிப்படுத்துவதாய் உள்ளது.

ஆனால், இதற்காக அரசியல்வாதிகளைக் குறைகூறுதல் என்பது பொருத்தப்பாடானதொன்றல்ல. ஏனெனில், இவ் அரசியல்வாதிகள் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக எத்தகைய வாக்குறுதிகளையும் வழங்கக் கூடியவர்கள். இது காலம் காலமாக இடம்பெற்றுவரும் நடைமுறையாகும்.புதிய அரசியல்வாதிகள் வந்துள்ளனர் என்பதற்காகப் பெரும் மாற்றம் ஏற்பட்டுவிடும் என எதிர்பார்ப்பது தவறாகும். நாட்டின் யதார்த்தத்திற்கு மீறியதாக அவர்களாலும் எதனையும் செய்துவிட முடியாது.

ஆனால், அரசியல்வாதிகளின் வாக்குறுதிகளை நம்பி வாக்களிப்பதும் பின்னர் ஏமாறுவதையுமே வரலாறாகக் கொண்ட மக்கள் தொடர்ந்தும் சலுகை அறிவிப்புக்களைகக் கொண்ட வாக்குறுதிகளை நம்பி வாக்களிப்பதுதான் கவலை தருவதாகும். அரசியல்வாதிகள் வழங்கும் வாக்குறுதிகள் நடைமுறையில் சாத்தியமானவையா? இல்லையா? என்பதை பகுத்தாராயாது மக்கள் வாக்களிக்கும் வரை ஏமாறுவது என்பது தொடர்வதாகவே இருக்கும். அதுமட்டுமல்ல அரசியல்வாதிகளும் காலத்திற்குக் காலம் விருப்பிற்கேற்ப வாக்குறுதிகளை வழங்கி தமது தேவையை நிறைவு செய்து கொள்வர்.

# பாராளு. உறுப்பினர் பதவி பிக்குகளுக்கு காலில் அணியும் செருப்புப் போன்றது

### ஹெல உறுமய-பா.உ.மேதானந்த தேரர்

பாராளுமன்ற உறுப்பினர் பதவி பௌத்த தேரர்களுக்கு கௌரவமான ஒன்றல்ல என ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் எல்லாவெல மேதானந்ததேரர் தெரிவித்துள்ளார்.

பௌத்த மக்களின் உரிமைகளைப்பாதுகாப்பதற்காகவே தாம் பாராளுமன்றம் சென்றுள்ளதாக அவர் கூறியுள்ளார்.கொழும்பில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசிய போது அவர் மேலும் தெரிவித்ததாவது, எமது நாட்டின் பௌத்த தேரர் களுக்கு இந்த பாராளுமன்ற உறுப்பினர் பதவி ஒரு பெரும் கௌரவம் என்று நினைக்க வேண்டாம்.தேசிய சம்மேளனம் ஒரு கிரீடமென்றால் இந்தப் பாராளுமன்ற உறுப்பினர் பதவி காலில் அணியும் செருப்புக்கு ஒத்தது. இந்தப் பயணத்தில் நாங்கள் செல்லுகினற பாதை எங்களுடைய இலக்கை நோக்கியது. தொடர்ந்தும் இவற்றில் இருந்துகொண்டு இந்தக்குப்பைகளோடு கலந்து கொண்டு இருப்பதற்கு இது உரிய இடம் அல்ல என்பதை நாங்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்று அவர் தனது உரையில் தெரிவித்துள்ளார்.

# மன்னாரில் எரிபொருள் அகழ்வு பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை

மன்னாரில் எரிபொருள் அகழ்வுப்பணிகளை மேற்கொள்ளப்போவதாக எண்ணெய் வள இயக்குநர் எட்வின் டைட்டஸ் தெரிவித்துள்ளார். குறிப்பிட்ட பிரதேசங்களில் அதிகளவான எண்ணெய் வளங்கள் இருப்பதற்கான தடயங்கள் கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளன. இதனையடுத்து அகழ்வுப் பணிகளுக்காக சர்வதேச கேள்விப் பத்திரங்கள் கோரப்படப்போவதாக டைட்டஸ் தெரிவித்தார். மன்னாரில் சுமார் 7 இடங்களில் எண்ணெய் வளங்கள் இருப்பதாக ஆரம்பகட்ட ஆய்வுகள் தெரிவித்துள்ளன. (32)

### எவரும் கைதாகவில்லை

மாத்தறை வீரக்கெட்டிய பகுதியில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச சூட்டு சம்பவத்தில சம்பந்தப்பட்டோா என எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை. நேற்று முன் தினம் துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் 4 பேர் கொல்லப்பட்டனர். இலங்கையின் தென்பகுதியில் இயங்கி வரும் பாதாள உலக குழுக்களுக்கு இடையிலான மோதலின் ஒரு கட்டமாக்வே இந்தக் கொலை சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

# நீதிமன்றில் ஆஜராகுமாறு கரு ஜெயசூரியவிற்கு உத்தரவு

முன்னால் அமைச்சரும் ஐக்கிய தேசியகட்சியின் பாராளுமன்ற உறுப்பினருமான கருஜெயசூரியவை அடுத்த மாதம் 8ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சியின் பிரதித் தலைவரான கரு ஜெயசூரியவிற்கு முன் பிணையாக நீதிமன்றம் தலா 10 இலட்சம் பெறுமதியான இருபிணைகளை கடந்த மாதம் வழங்கியிருந்தமை இங்குகுறிப்பிடத்தக்கது.

# உள்ளூராட்சி சபைகளை மேலும் வலுப்படுத்த நடவடிக்கை

### அமைச்சர் ஜனகபண்டார தென்னக்கோன்

உள்ளூராட்சி சபைகள் மேலும் வலுப்படுத்தப்பட்டு இது தொடர்பாக பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப படுமென்று அமைச்சர் ஜனகபண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

சகல உள்ளூராட்சி நிறுவனங்களுக்கும் ஒழுக்கக்கோவை அறிமுகப்படுத்தப்படும் என்றும் மக்களின் பிரச்சினைகளை கண்டறிவதற்கு குறைகேள் அதிகாரி ஒருவரும் நியமிக்கப்படுவாரென்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்த ஆண்டு உள்ளூராட்சி வாரத்தில் காணப்பட்ட முன்னேற்றம் பற்றி மளாய்வு செய்வதற்கென அமைச்சர் ஜனகபண்டார தென்னக்கோன் நேற்று கொழும்பில் கூட்டமொன்றினையும் நடத்தியுள்ளார்.

இதன்போது மாகாணசபைகள், உள்ளூராட்சி சபைகள் ஆகியவற்றுக்கிடையே சிறந்த ஒருங்கிணைப்பு மேற்கொள்ளப்படுமென்றும் மாநாகரசபை, நகர சபை ஆகியவற்றின் அர்ப்பணிப்புடன் சிறந்த சேவை ஆற்றும் உத்தி யோகத்தாகளுக்கு வெகுமதிகள் வழங்கப் படுமென்றும் அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்தார்.

# ஆண் தொழிலாளர்களுக்கு வெளிநாட்டில் வேலைவாய்ப்புப் பெற்றுக் கொடுக்கத் திட்டம்

இலங்கையர்களுக்கு வெளிநாடுகளில் கூடுதலான வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பதற்கு பத்தாண்டு திட்டமொன்று தயாரிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதில் பயிற்சி பெற்ற தொழிலாளர்களில் ஆண் தொழிலாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப் படுமென்று வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் அதாவுட செனவிரட்ண தெரிவித்துள்ளார்.

பெண்களை வீட்டுப்பணிப்பெணகளாக அனுப்புவதிலும் பார்க்க இத்திட்டம் வெளிநாட்டு நாணய மாற்றினைத் சம்பாதித்து கொடுப்பதற்கு சிறந்தது என்று அமைச்சர் அதாவுடசெனவிரட்ண தெரிவித்துள்ளார்.

பெண்களை வேலை வாய்ப்பிற்கு வெளிநாட்டிற்கு அனுப்புவதனால் சமூக ரீதியாக தாக்கங்கள் ஏற்படுகின்றன என்றும் அமைச்சர் செனவிரட்ண சுட்டிக் காட்டினார்.

### -பள்ளிவாசலில் கலவரம் புரிந்தார்-

# இல. இரத்தினக்கல் வியாபாரியை மலேசியப் பொலிசார் தேடுகின்றனர்

மலேசியாவில் பள்ளிவாசல் ஒன்றில் பிரார்த்தனைக்காக கூடியிருந்தோரிடையே அவதூறாகப் பேசி அந்நாட்டை அவமதித்ததாகக் கூறப்படும் இலங்கையைச் சேர்ந்த இரத்தினக்கல் வியாபாரியொருவரை பொலிசார் தேடிவருகின்றனர்.

சென்ற வெள்ளிக்கிழமை 'கிங்' என்ற இடத்தில் உள்ள பள்ளிவாசலில் பிரார்த்தனைக்காக மக்கள் கூடியிருந்தவேளை குறித்த வியாபாரி பள்ளிவாசல் வளாகத்தில் நின்று அந்நாட்டின் சுதந்திரத்தை அவமதித்து, அவதூறாகப் பேசியதாகவும் இதையடுத்து கொடுக்கப்பட்ட முறைப்பாட்டை அடுத்தே பொலிசார் இவ்வியாபாரியை தேடிவருவதாகவும் இணையதள செய்தி கூறுகின்றது.

# அளம்பிலில் சிறப்புற நடைபெற்ற "இதயபூமி" வெற்றிவிழா நிகழ்வு

(அலுவலக செய்தியாளர்)

மண்கிண்டி மலையில் அமைந்திருந்த சிறிலங்காப்படைமுகாம் மீதான "இதயபூமி" வெற்றித் தாக்குதலின் 11 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு நேற்று அளம்பிலில் வெகு சிறப்பாக நடைபெற்றுள்ளது.



நேற்று மாலை 5.00 மணிக்கு அளம்பில் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு அருகாமையில் அமைக்கப்பட்ட இதயபூமி வெற்றித் தாக்குதலில் வீரகாவியமடைந்த மாவீரர்கள் நினைவாலயத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் பொதுச்சுடரை அளம்பில் பங்குத் தந்தை யூட் அமலதாஸ் அடிகள் ஏற்றிவைத்தார். தமிழீழ தேசியக் கொடியை கடற்புலிகளின் முல்லை. மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் றங்கன் ஏற்றிவைத்தார்.

இதனைத் தொடர்ந்து 1993 ஆம் ஆண்டு இதயபூமி வெற்றிச்சமரின் போது வீரகாவியமான பத்துப்போராளிகளின் திருவுருவப்படங்களுக்கும் சுடர் ஏற்றி, மலர் மாலை அணிவிக்கப்பட்டது. லெப்.தமிழ் வாணன் அவர்களின் உருவப்படத்திற்கு முல்லை. மாவட்ட அரசசார்பற்ற நிறுவனத் தலைவர் வே. சிவனடியார் சுடர் ஏற்றினார். லெப். துரைக்கண்ணன் அவர்களின் உருவப் படத்திற்கு செம்மலை கிராம அலுவலர் வ. புஸ்பராசா ஏற்றினார். லெப். அழகப்பன் அவர்களின் உருவப்படத்திற்கு அளம்பில் வடக்கு கிராம அலுவலர் ந. தெய்வேந்திரம்பிள்ளையும், லெப்.குயிலினியின் உருவப்படத்திற்கு அளம்பில் தெற்கு கிராம அலுவலர் ஜெயபாபுவும், லெப். விமலனின் உருவப்படத்திற்கு உப்புவெளி கிராம அலுவலர் ந..பரஞ்சோதியும், லெப். நக்கீரனின் உருவப்படத்திற்கு குமுழமுனை கிராம அலுவலர் ஞானேந்திரனும்,லெப். சிகாமணியின் உருவப்படத்திற்கு முல்லை தெற்கு பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க முகாமையாளர் ஜெகதீஸ்வரனும்,லெப். திருமலை நம்பியின் உருவப் படத்திற்கு கரைதுறைப்பற்று கோட்டக்கல்வி அலுவலகத்தைச்சேர்ந்த திருமதி அந்தோனிப்பிள்ளையும், லெப்.ஈழ வேந்தனின் உருவப்படத்திற்கு அளம்பில் தெற்குக் கமக்காரர் அமைப்புத் தலைவர் மி. டேவிற் தேவராசாவும்,லெப்.வில்லவனின் உருவப்படத்திற்கு அளம்பில் மனிதவள அலுவலர் லோகனும் சுடர் ஏற்றி மலர் மாலை அண்வித்தனர்.

கடற்புலிகளின் அளம்பில் பிரதேசப் பொறுப்பாளர் யாழ்மன்னன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சிறப்புரைகளைப் பங்குத்தந்தை யூட் அமலதாஸ் அடிகள், முல்லை மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் தலைவர் வே. சிவனடியார், கடற்புலிகளின் முல்லை.மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் றங்கன்,கிராம அலுவலர்களான ஞானேந்திரன், தெய்வேந்திரம்பிள்ளை ஆகியோர் நிகழ்த்தினர்.

மேற்படி நிகழ்வில் போராளிகள், பொதுமக்கள் எனப் பெருமளவானவர்கள் கலந்துகொண்டனர். (லோ.தீ.,20)

# ஈழத்தமிழ் அறிஞர்களை வெளியேற்றி ஒன்பது கோடி தமிழ் மக்களை அவமதிக்கின்றனர்

## இந்திய அதிகாரிகள் மீது பழ நெடுமாறன் குற்றச்சாட்டு

உலகத்தமிழர் மாநாடு நடைபெறுகின்ற போதெல்லாம் நம்முடைய இரத்தத்தோடு இரத்தமாக நம்முடைய தசையோடு தசையாக நம்முடைய சகோதரர்களாக இருக்கக் கூடிய ஈழத்தமிழ் அறிஞர்கள் வருவார்களேயானால் அவர்களை கட்டாயப்படுத்தி வெளியேற்றுவதன் மூலம் ஒட்டுமொத்தமாக ஒன்பது கோடி தமிழின மக்களையும் இந்திய அரசைச்சேர்ந்த அதிகாரிகள் அவமதிக்கின்றார்கள் என்று பழநெடுமாறன் கூறியுள்ளார்.

உலகத்தமிழர் பேரவையின் இரண்டாம் ஆண்டு நிறைவு விழா மாநாடு நேற்று இந்தியாவிலுள்ள பெங்களூரில் நடைபெற்றுள்ளது.

இம்மாநாட்டு நிகழ்வில் கலந்து கொண்ட பழநெடுமாறன் அங்கு கருத்து வெளியிடுகையில் இதனைத் தெரிவித்தார். அவர்மேலும கூறுகையில் மாநாட்டில் கலந்து கொள்ள விடாது. ஈழவேந்தனை திருப்பியனுப்பியது ஏற்றுக்கொள்ளமுடியாத ஒரு செயல், சனநாயகத்திற்கு முரணானது; எந்தக்கட்சி வந்தாலும், எந்த அமைப்பு, எந்தக்கூட்டணி வந்தாலும் அங்குள்ள அதிகாரிகள் மாறுவதில்லை.

"எந்த ஆட்சி வந்தாலும், எந்தக் கட்சி போனாலும் கவலையில்லை எங்களுடைய போக்கை நாம் ஒருபோதும் மாற்றிக்கொள்ள மாட்டோம்" என்று சொல்கிற இந்த அதிகாரிகள் டில்லியில் இருக்கின்ற காலம்வரை தமிழர்களுக்கு மரியாதை என்பது நிச்சயமாக இல்லை. நான் மதிப்பிற்குரிய பிரதமர் அவர்களையும், மதிப்பிற்குரிய வெளிநாட்டுத் துறை அமைச்சரையும் கேட்டுக்கொள்கின்றேன். "ஈழவேந்தனை வெளியேற்றியதன் மூலம் எங்களை அவமதித்துள்ளீர்கள். இவ்வாறு தொடர்ந்து நடப்பீர்களானால் விளைவுகள் விபரீதமாக போய் முடியும்" என்று எச்சரிப்பதற்கு கடமைப்பட்டுள்ளேன் என்று நெடுமாறன் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சிங்கப்பூரிலுள்ள கருணாவை அமெரிக்க அதிகாரிகள் சந்திப்பர்

## கொழும்பு ஆங்கில நாளேடு தகவல்

சிங்கப்பூரிற்கு சென்றுள்ள கருணாவை அமெரிக்க அதிகாரிகள் சிலர் சந்திக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக கொழும்பு வாரப்பத்திரிகை ஒன்று தெரிவிக்கின்றது.

கருணாவை புலிகளுக்கு எதிரான பிரச்சாரத்திற்கு அரசாங்கம் பயன்படுத்துவதற்கே சிங்கப்பூருக்கு அனுப்பிவைத்துள்ளதாகவும், அங்கு அமெரிக்க அதிகாரிகள் ஒழுங்கு செய்துள்ள கூட்டத்தில் பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகள் குறித்து உரையாற்றவுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது கருணா விடுதலைப் புலிகள் குறித்த பல தகவல்களை வெளியிடுவார் என அமெரிக்க அதிகாரிகள் எதிர்பார்ப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# - பிரதமர் திருமலை சென்றவேளை -

# சந்தேகத்துக்கிடமாக நடமாடியதாக மூன்று தமிழர்கள் பொலிசாரால் கைது

(கொழும்பு)

சிறிலங்காப் பிரதமர் மகிந்தராஜ பக்ஷ நேற்று திருமலை கந்த ளாய் சென்றவேளை அங்கு சந்தேகத்துக்கு இடமான ரீதியில் நடமாடியதாகக் கூறி 3 தமிழர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்கள் மூவரும் ஒரு தேநீர்ச் சாலையில் சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடினார் கள் என்றும், இவர்கள் பிரதமரின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் வகையில் நடந்து கொண்டார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டதாகவும் கந்தளாய் பொலிசார் தெரிவிக்கின்றனர்.(32)

## கறுப்பு

வர்த்தக நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், அரசநிறுவனங்களின் முன்னாள் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் பல்கலைக்கழக வளாகத்திற்கு முன்பாக நின்று மக்களுக்குகறுப்புப்பட்டிகளை வழங்கினர். மன்னாரில் நேற்று கறுப்பு யூலை தினம் துக்கதினமாக அனுஷ்டிக்கப்பட்டது. அனைத்துக் கடைகளும் மூடப்பட்டிருந்ததுடன் எவ்விதவாகன •போக்குவரத்தும் இடம்பெறவில்லை. அத்துடன் வீடுகளிலும் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டன.

வவுனியா கறுப்புயூலை தினத்தினை முன்னிட்டு வவுனியா மாவட்டத்தின் அனைத்துச் செயற்பாடுகளும் முடக்கப்பட்டு இருந்தது. வவுனியா வெகுசன ஒன்றியத்தின் அழைப்பின் பெயரில் நேற்று வவுனியாவில் முழுமையான கதவடைப்பு மேற்கொள்ளப் பட்டுள்ளது. போக்குவரத்து மந்தகதியில் இருந்தது.

(33,27,36,21,மி)

# அமெரிக்க அதிகாரிகள் எவருக்கும் கருணாவுடன் தொடர்பில்லை

## அமெரிக்கத் தூதரகம் தெரிவிப்பு

கருணாவுடன் அமெரிக்கத் தூதரகத்தைச் சேர்ந்த எவருக்கும் அல்லது எந்தவொரு அமெரிக்க அரசாங்க அதிகாரிக்கும் எதுவித தொடர்புமில்லையென்று அமெரிக்கத்தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று கொழும்புப் பத்திரிகையில் வெளியான கட்டுரைக்கு பதிலளிக்கும் வகையில் அமெரிக்க தூதரகம் இவ்வாறு அறிக்கையொன்றினை வெளியிட்டுள்ளது.

இப்பத்திரிகையில் வெளியான அறிக்கையின் படி கருணா பயங்கரவாத எதிர்ப்புத் தொடர்பாக சிங்கப்பூரில் அமெரிக்க வெளிவிவகார திணைக்கள அதிகாரிகளுக்கு உரையாற்றும் படி அழைக்கப்பட்டுள்ளாரென கருணாவுடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்திருப்பதாக குறிப்பிடப்படுகிறது.

எனினும் அமெரிக்கத்தூதரகம் இப்பத்திரிகையில் வெளிவந்த கட்டுரை முற்றிலும் பொய்யானதென்று தெரிவித்துள்ளது.

## தலைவர்...

கையிலேயே இவ்வாறு கூறினார். அவர் மேலும் உரையாற்று கையில் இன்று பேரினவாதிகள் என்ன நினைக்கின்றார்களெனில் கருணா போன்ற சிலரை வைத்துக்கொண்டு மீண்டும் தமிழனை பிளவுபடுத்தலாமென்று நினைக்கின்றார்கள். ஒன்று நினைத்துக்கொள்ளுங்கள் எத்தனை கருணாக்கள் வந்தாலும் ஈழத்திலே தமிழன் தலை நிமிர்வான், உறுதியாக நிற்பான் என அவர் மேலும் கூறினார்.

## தம்மிக்க...

தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இராணுவத் தலைமையிடம் தாம் தொடர்புகொண்டு கேட்டபோது இப்படியான பெயரையுடைய ஒருவர் தமது புலனாய்வுப் பிரிவிலேயே இல்லையென இராணுவத்தளபதி தெரிவித்துள்ளதாகக் கூறினார். அத்துடன் கொல்லப்பட்டவர்களின் சடலங்களைப் பார்வையிட்ட இராணுவ உயரதிகாரிகளும் கொல்லப்பட்டவர்களில் ஒருவரான தம்மிக்க என்பவரைத் தமக்குத் தெரியாது எனவும் கூறியுள்ளனர். எனினும் இந்த தம்மிக்க எனும் நபர் யார் என்று 24 மணித்தியாலயத்துக்குள் தாம் கண்டுபிடித்து விடுவோம் எனவும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

## இராணுவப்

எனவும் பி.பி.ஸி. செய்தியாளர் தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பாக பொலிஸ் அதிகாரி ஒருவர்தகவல்தருகையில் கொல்லப்பட்ட 8நபர்களும் உறங்கிக்கொண்டிருந்தவேளையில் அவர்கள் உறங்கிய இடத்தில் வைத்தே சுடப்பட்டிருக்கிறார்கள் எனவும் வீட்டை உடைத்துக் கொண்டு வெளியில் இருந்து யாரும் சென்றதாக அடையாளங்களோ தடயங்களோ அங்கு எதுவும் காணப்படவில்லை யென்றும் முன்கதவு திறக்கப்பட்டு இருந்ததாகவும் அங்கு ஒரு கார் நிறுத்தப்பட்டிருந்ததாகவும் இவற்றையெல்லாம் பார்க்கும்போது தங்கியிருந்தவர்களே இந்தக் கொலையைச் செய்துவிட்டுத் தப்பியிருக்கலாமென்று சந்தேகம் ஏற்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இவர்கள் எவ்வளவு காலமாக அங்கு தங்கியிருந்தார்கள் என்று அயலவர்களிடம் கேட்டபோது கடந்த யூலை மாதம் 2 ஆம் திகதி தொடக்கம் குறிப்பிட்ட வீட்டில் 8-10 இளைஞர்கள் தங்கியிருந்ததாகவும் இவர்களில் ஒருவர் அல்லது இருவர் தான் அடிக்கடி வெளியில் சென்று வருவதாகவும் ஏனையோர் அங்கு தங்கிருந்ததாகவும் தெரிவித்தனர்.

அவர்கள் மாதாந்த வாடகையாக 11 ஆயிரம் ரூபா கொடுத்துள்ளதாகவும் முற்பணமாகவும் ஒருவருட வாடகை கொடுத்துள்ளதாகவும் இந்த வீட்டின் உரிமையாளர் தற்போது இலங்கைக்கு வெளியே தங்கியிருப்பதாகவும் அவர்கள் மேலும் தகவல் தெரிவித்தனர்.

அப்பிரதேசத்திற்கு பொறுப்பான இராணுவ உயர் அதிகாரி லெப்டினன்ட் கேணல் ஆனந்த விமலவீர என்பவர் தகவல் தருகையில் இக்கொலைக்கு 9மில்லி மீற்றர் பிறௌணிங் பிஸ்டல் என்றழைக்கப்படும் கைத்துப்பாக்கிகள் பாவிக்கப்பட்டிருப்பதாகவும், இதனால் அயலவர்களுக்குக் கூட வெடிச்சத்தம் போன்ற சத்தமே கேட்டதாகவும், பாரியதொரு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நிகழவில்லையெனவும் இச்சம்பவத்தில் இராணுவப்புலனாய்வுத் துறை அதிகாரிகளோ அல்லது இராணுவப் பிரிவைச் சேர்ந்த எந்த உறுபபினர்களோ சம்பந்தப்பட்டிருக்கவில்லையென்றும் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக முதலில் பொலிசாருக்கு எதுவும் தெரியவந்திருக்கவில்லை எனவும் ஊடகத் தகவலின் அடிப்படையிலேயே பொலிசார் சென்று சடலங்களைக் கைப்பற்றிதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## தமிழீழ...

1.30 மணிக்கு கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெற உள்ளது. இத்தேர்வில் தேசியமட்டத் தில் வெற்றிபெற்றவர்களில் ஒன்பது பேருக்கும் தமிழீழ வைப்பகம் தலா 5000 ரூபா வீதம் 45000ரூபா வழங்குகிறது. வலயமட்டத்தில் வெற்றி ஈட்டியவர்களுக்கான பரிசில்களை கல்விக்கழகமும் கல்வி மேம்பாட்டுப் பேரவையினரும் இணைந்து வழங்குகின்றனர். எனவே இத்தேர்வில் வெற்றிஈட்டிய மாணவர்கள் அனைவரையும் மேற்படி பாடசாலைக்கு 12.00 மணிக்கிடையில் வருகை தருமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.

மேற்படி தேர்வில் கிளி. கல்வி வலயத்திற்குட்பட்ட பூநகரி நல்லூர் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த உதய சூரியன் அனுராஜ் என்ற மாணவான் தொடர்ச்சியாக மூன்று வருடங்களாக தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தைப்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை தமிழீழ கல்விக்கழகத்தினால் க. பொ.த.சாதாரணதர மாணவர்களுக்குப் புதிதாகக் கற்பிக்கப்பட்டுவரும் கடல்நீர் உயர்வளத் தொழில்நுட்பப்பாடம், உண்ணாட்டு நீர்வாழ் உயிர்வள தொழில் நுட்பப் பாடம் ஆகிய பாடங்களில் க.பொ.த. சாதாரணதரத்தில் பங்குபற்றி A தரத்தில் மிகுதிறன் தேர்ச்சிபெற்ற எட்டுமாணவர்களும் அன்றைய தினம் பரிசில் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளார்கள் எனவும் தமிழீழ கல்விக்கழகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(பெறுபேற்று விபரம் 08 ஆம் பக்கத்தில்) (லோ).

## அவுஸ்திரேலிய.....

.பாணத்திற்கு விஜயம் செய்த இக்குழு யாழ். மாவட்ட சிறிலங்கா இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபாலவை பலாலி இராணுவத்தளத்தில் வைத்துச் சந்தித்துக் கலந்துரையாடியது.

இதன்போது யாழ். மாவட்டத்தில் நிலைகொண்டுள்ள சிறிலங்காப் படையினரது பயிற்சி நடவடிக்கைகள் ,புலனாய்வு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றி ஆராயப்பட்டதுடன் இராணுவ நிலைகளைப் பலப்படுத்துவது தொடர்பான ஆலோசனைகளும் அவுஸ்திரேலியப் படையதிகாரிகளால் வழங்கப்பட்டுள்ளன என தெரிய வருகிறது. (33)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு யூலை மாதம்26ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.